121. தையலோ தருமமோ ?

மனம் சோர்வுற்றிருந்தால், தெளிவாக ஆராய்ந்து அறிந்து உண்மை காணும் ஆற்றல் குன்றிப் போகும். கவலைக் கடலில் மிதந்து அந்த அலைகளால் மொத்துண்டு திசையும் துறையும் அறியாதிருக்கும் போது, 'தொலைந்தோம்; தொலைந்தே போனோம் : முழுகிப் போய் விடுவோம்' என்ற எண்ணங்கள் குமிழியிடுவதில் அதிசயமில்லை.

பொய்யே தருமமா ?

சீதை இப்போது இருக்கும் நிலையில் கவலைக் கடலில் மூழ்கிப் போய் விடாமல் தைரியமாக ராவணனிடம் பேசியதே அதிசயம்தான். எனினும் அவன் அயோத்திக்கும் மிதிலைக்கும் படை வீரர்களை அனுப்பியதாகச் சொன்ன போது, 'அப்படியும் நடந்திருக்கக் கூடுமோ! எல்லைப்பிடித்த துரதிர்ஷ்டம் அவர்களையும் பிடித்துப் பீடிக்கிறது போலும்!' என்று எண்ணமிடுகிறாள்.

'என்னை இம் மாயம் செய்தவருக்கு ஒன்றும் அரியதில்லை' என்று நம்புகிறாள்; உடனே அச்சம் அதிகரிக்கிறது. இந்த நிலையில்,

நின்று நின்(று) உயிர்த்து
நெஞ்சம் வெதும்பினாள்,
நெருப்பை மீளத்

தின்று தின்(று) உமிழ்கின்—
றாரின் துயருக்கே
சேக்கை ஆனாள்.

[உயிர்த்து – பெரு மூச்சு விட்டு. உமிழ்கின்றாரில் – உமிழ்கிறவர்களைப் போல. சேக்கையானாள் – இருப்பிடமானாள்.]

இத்தகைய பெருந் துன்ப நிலையில் சீதை தன்னைத் தானே உள்ளுக்குள்ளே வெறுத்துக் கொள்கிறாள் :

'இத்தலை இன்ன
செய்த விதியினார்
என்னை இன்னும்

அத்தலை அன்ன
செய்யச் சிறியரோ ?
வலிய ரம்மா !

பொய்த்தலை யுடைய
தெல்லாம் தருமமே
போலும் !' என்னாக்

கைத்தனள் உள்ளம்,
வெள்ளக் கண்ணின் நீர்க்
கரையி லாதாள்.

[இத்தலை – இவ்விடத்து. இன்ன – இப்படிப்பட்ட செயலை. அத்தலை – அயோத்தி மிதிலை என்ற அந்த இடங்களில். அன்ன– ராவணன் சொன்ன அந்தச் செயலை. பொய்த்தல் – பொய்த்துப் போகும் தன்மை. போலும் – போலத் தோன்றுகிறது. என்னா – என்று தனக்குள் தானே சொல்லிக் கொண்டு. கைத்தனள் உள்ளம் – மனக் கசப்பை அடைந்தாள். வெள்ளக் கண்ணின் நீர் –வெள்ளமாகிய கண்ணீர்.]



'இந்த விதியின் கூத்திலே பொய்யே தருமம் போலும்' என்று சீதை எண்ணமிடும் போதே, பரிதாபமாய்க் கதறும் ஒரு குரல் காதில் விழுகிறது 'சந்தேகமில்லை; என் தந்தையின் குரல் தான்' என்று நம்புகிறாள்.



சிறைப்பட்ட ஜனகன்

'படையெடுத்துப் போன அரக்கர்கள் ஜனகனைச் சிறை பிடித்துக் கதறக் கதறக் கொண்டு வந்து விட்டார்களே,— ஆஹா. அந்தப் படையெடுப்புச் செய்தி உண்மை தான்' என்று சீதை கருதும் போதே. கதறும் ஜனகன் சினக் கனலே உருவெடுத்து ஜொலிப்பது போலத் தோன்றும் ராவணன் எதிரே ஆஜர் செய்யப்படுகிறான்.

ஆஜர் செய்பவன் மகோதரன் தான். சொன்னபடியே செய்து விடுகிறான். ஆம்; அந்த மருக்தப் பயலைத் தான் ஜனகனைக் கொண்டு வந்து விடுகிறான்.



சீதைக்கோ உருவத்திலும் ஐயம் ஏற்படவில்லை; அந்தக் குரலிலும் கூட வித்தியாசம் தெரியவில்லையே.

எந்தச் சந்தர்ப்பத்தில் இந்த நாடகம் நடக்க வேண்டுமென்று ராவணன் நினைத்தானோ, அதே சந்தர்ப்பத்தில் 'மருத்தன் –ஆட்டம்' தொடங்கி விடுகிறது.

வெற்றியர் தம்மைச்
செல்லச் சொல்லினன்
விரைவின்

என்று சீதையை நோக்கி ராவணன் சொன்னானல்லவா! அப்போது 'விரைவின்' என்பதை அழுத்தி உரக்க உச்சரித்து விட்டான், மகோதரனுக்குக் கட்டளையாக.

சிறிது தூரத்திலே தான் வேஷம் போட்டுக் கொண்டிருந்தான் மகோதர சிஷ்யன். குருவுக்கும் அதிசயமாகி விட்டது மருத்தன் வித்தை. 'பலே!' என்று தட்டிக் கொடுத்திருப்பான். 'பபலே, கொஞ்சம் கத்திப் பாரடா! ஜனகன் குரலுக்குப் பதில் உன்னுடைய கழுதைக் குரல் வந்து விடலாகாதே!' என்றும் சொல்லியிருப்பான்!

இப்படியெல்லாம் ஒத்திகை நடத்திக் கொண்டிருக்கும் போதே ஏற்கெனவே தீர்மானித்திருந்த சங்கேதத்தின்படி 'விரைவின்' என்ற எச்சரிக்கை – வார்த்தை இருவர் காதிலும் விழுந்து விட்டது. உடனே மருத்தனை அழைத்து, ஏன்; இழுத்துக் கொண்டு வந்து விட்டான் மகோதரன்.

இனி நாம் மருத்தன் மகோதரன் ராவணன் சீதை ஆகிய நால்வர் நிலையையும் இந்தக் கவிதைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்வோம்:

ஆவதோர் காலத்(து),
ஆங்கண், மருத்தனைச்
சனக னுக்கி

வாய் திறந்(து) அரற்றப்
பற்றி மகோதரன்
கடிதின் வந்து

காய்எரி அனையான்
முன்னர்க் காட்டினன்;
வணங்கக் கண்டாள்,

தாய்எரி விழக்
கண்ட பார்ப்(பு)எனத்
தரிக்கி லாதாள்.

[ஆவதோர் காலத்து – 'விரைவின்'] என்ற ராவணனது அடையாள வார்த்தை காதில் விழுந்த காலத்தில், ஆங்கண் – அங்கே. கடிதின் – விரைவில். காய் எரி அனையான் – காய்ந்து எரிந்து கொண்டிருக்கும் நெருப்பைப் போன்ற ராவணன். தாய் எரி விழக் கண்ட – தாய்ப் பறவை நெருப்பில் விழுவதைக் கண்ட. பார்ப்பு என – பறவைக் குஞ்சு போல, தரிக்கிலாதாள் – மனம் தாங்காதவள் ஆனாள்.]

'படையெடுத்துப் போன வீரர்கள் ஜனகனை மிதிலையிலிருந்து சிறை பிடித்துக் கொண்டு வந்து விட்டார்கள். 'இதோ பார் அரசே!' என்று சொல்லாமல் சொல்லி ஆஜர் செய்யும் மகோதரனையும், வாய் திறந்து கதறிக் கொண்டிருக்கும் ஜனகனையும், ஒரே கோபாக்கினியாகக் காணும் ராவணனையும், சோகாக்கினியில் வெதும்பிக் கொண்டிருக்கும் சீதையையும் பார்க்கிறோம்.

அன்பு குருடாக்குகிறது!

சீதையின் துயரம் நமது கவனத்தை அப்புறமும் இப்புறமும் செல்ல விடாது கவர்ந்து விடுகிறது.

சீதையின் இத்துயர நிலையை முதல் முதல் இவள் செயல்களைக் கொண்டே அதிசயமாக நமக்கு எதிரே காட்டி விடுகிறான் கவி:

கைகளை நெரித்தாள்;
கண்ணில் மோதினாள்;
கமலக் கால்கள்

நெய்எரி மிதித்தால்
என்ன நிலத்திடைப்
பதைத்தாள்; நெஞ்சம்

மெய்என எரிந்தாள்;
ஏங்கி விம்மினாள்;
நடுங்கி விழ்ந்தாள்;

பொய்என உணராள்
அன்பால்; புரண்டனள்
பூச லிட்டாள்.

[கமலக் கால்கள் – தாமரை மலர் போன்ற தன் கால்கள். நெய் எரி – நெய் சொரிய எரிகின்ற அக்கினி. மிதித்தால் என்ன – மிதித்தாற் போல. நிலத்திடை – நிலத்தின் மீது. நெஞ்சம் மெய் என எரிந்தாள் – உள்ளமும் உடல் போல் வேகப் பெற்றாள். பூசல் இட்டாள் – சத்தம் போட்டுக் கதறினாள்.]

கதறி அழுததால் தான் சீதை பிழைத்துக் கொண்டாள் என்று ஊகிக்கும்படி அமைந்திருக்கிறது கவிதை. சீதை வாய் விட்டுக் கதறியதை மூன்று கவிகளில்

தெரிவித்த பின், மூச்சற்று விழுந்ததாகவும், மறுபடியும் தெளிந்து வாய் விட்டுப் புலம்பியதாகவும் கவி அமைத்திருக்கிறான் இந்தச் சோகக் காட்சியை.

வாய் விட்டு அழத் தொடங்கியதும், 'தெய்வமே!' என்பதுதான் முதல் வார்த்தை. பிறகு 'மெய்ம்மை சிதைந்ததோ!' — அதாவது. சத்தியம் செத்துப் போய் விட்டதா!— என்று கேட்கிறாள்.

தெய்வத்திற்கே இக் கேள்வி தெய்வமே மெய்ப் பொருளாதலின், தெய்வமே நீ இருக்கிறாயா, இறந்தே போய் விட்டாயா!' என்று கேட்பது போல் அமைந்திருக்கிறது இந்தக் கவிதைப் பகுதி.

விவிலிய நூலில் சோகாக்கினியால் வெதுப்பப் பெற்ற ஜோப் என்பவனுக்கு, 'கடவுளைச் சபித்து விட்டுச் செத்துப் போ!' என்ற புத்திமதி கிடைக்கிறது. அவனோ சோகாக்கினி நீறுகிச் சாம்பலுமின்றி மறைந்து போகும்வரை பொறுத்திருந்து பேறு பெறுகின்றான். அப்படியே சீதைக்கும் இப்போது ஒரு சோதனை.

'இந்த உலகைச் சபித்து விடட்டுமா!' என்று நினைத்தாள்.

எல்லை நீத்த
உலகங்கள் யாவும் என்
சொல்லினால் சுடுவேன்!

என்று ராவணனை நோக்கி முன் ஒரு சமயம் சொன்னது வீண் வார்த்தையாக இருக்க முடியுமா! எனினும் அப்படிச் செய்யாமலே தன் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறாள்.

சத்தியம் செத்துப் போகவில்லை யென்றும், அதற்குத்தான் சக்தி உண்டு என்றும் தெரிந்தவள்தான்: இப்போது புலம்புகிறாள்: 'வஞ்சமோ வலியது!' என்று. இத்தகைய வஞ்ச உலகத்திலும் நான் பிழைத்திருக்க வேணுமோ என்று புலம்புகிறாள்.

இப்படி யெல்லாம் பல படியாகத் துன்பமுற்று வாய் விட்டு அரற்றிக் கொண்டிருப்பது?

தையலோ? தருமமோ?

என்று கேட்கிறது கவியுள்ளம். தரும தேவதையே வாய் விட்டு அரற்றுகிறது சீதை வடிவில் என்பது குறிப்பு.

'எந்தையே! எந்தையே! என்பொருட்டாக உனக்கும் இந்தக் கஷ்டம் வந்ததே! என்னைப் பெற்று வாழ்ந்த வாறு இதுவோ!' என்று புலம்பிய வண்ணம்' நெருப்பால் எரிக்கப்பட்டு விழும் விறகு போலக் கீழே வீழ்ந்து விடுகிறாள்.

ஜனக மகாராஜாவின் தரும காரியங்களெல்லாம் நினைவிற்கு வருகின்றன. 'வலிமைக்குத் தான் குறைவு உண்டா! வயிரத்தோள் கட்டுண்டாய்! உன் புதல்வியாகிய நானும் காண்கிறேன் போலும்!' என்கிறாள்.

இப்படிப் புலம்பிக் கொண்டே சீதை எழுந்திருக்க முயன்று, மெள்ள எழுந்தும் நிற்கிறாள். எனினும் துயரம் தாங்க மாட்டாமையால் மறுபடியும் கீழே விழுந்து விடுகிறாள்.

ஒரு கணம் மின்னற் கொடி ஒன்று நிலத்தில் விழுந்து புரள்வது போன்ற தோற்றம். மறு கணம் மூர்ச்சித்துப் போகிறாள்.

விரைவில் மூர்ச்சை தெளிந்து எழுந்து மறுபடியும் பிரலாபிக்கிறாள். தந்தையைப் பற்றிய எண்ணங்கள் வெள்ள மிடுகின்றன.

கல்யாணத்திற்குப் பின் சீதை கணவனுடன் அயோத்திக்குப் போய் விட்டாளல்லவா! பிறகு, பிறந்தகத்தார் பெண்ணுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வதற்குக் கூட ஜனகன் தன் ஊரை விட்டுப் புறப்படவில்லை யாம். 'தானுண்டு, தன்னுடைய ஞானம் உண்டு, தர்ம காரியங்கள் உண்டு' என்று அப்படியே மிதிலையில் இருந்து விட்டானும்.

அப்பேர்ப்பட்ட ஞான மூர்த்தியை யல்லவா சிறை பிடித்துக் கொண்டு வந்து விட்டார்கள் பாவிகள்!

சிறையிடைக் காண
நீரும் சிறையொடும்
சேர்ந்த வாறோ?

என்று புலம்புகிறாள் சீதை.

கணவனுடன் தான் கவலையற்ற இன்ப வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்த காலத்திலே பார்க்க வராத தந்தையார் சிறையிலிருக்கும் புதல்வியைப் பார்க்கத் தாமும் சிறைப்பட்டு வந்து விட்டாரே! விதியின் கூத்தை என்னென்பது!

பகை முடித்துத் தான் மீண்டும் கணவனுடன் இன்ப வாழ்க்கை வாழலாமென்று நம்பி யிருந்த அந்த நம்பிக்கையில் இப்போது இடி விழுந்து விட்டது! தந்தை வம்ச நாசமாகவும் தான் காரணமாகி விட்டதாய்ப் பிரலாபிக்கிறாள்.

களைப் புறக்கணித்து விட்டேன். இந்தக் கண்டம் தப்பினுல், கட்டாயம் பணத்தைத் தொட மாட்டேன். தெய்வ வழிபாட்டிலும், ஏழை எளியவர்களின் பராமரிப்பிலும் என் வாழ் நாட்களைக் கழிப்பேன் ... சுவாமிஜி ! எனக்காக வேண்டிக் கொள்ளுங்கள், நீங்கள் யாசித்தால், பகவான் கட்டாயம் அருள் புரிவார்'' என்று ஏதேதோ சொல்லிக் கதறிக் கொண்டிருந்தார்......

விமானம் நிலையத்தில் இறங்கிய பொழுது மாலை ஐந்தரை மணி இருக்கும். நெருப்பணைக்கும் இயந்திரம், செஞ்சிலுவைப் படை எல்லாம் தயாராகக் குழுமியிருந்தன. கூடியிருந்த அத்தனை பேரும், விமானியைச் சூழ்ந்து பாராட்டிக் கொண்டிருந்தார்கள். அவர் மிக சாமர்த்தியமாக விபத்தைத் தவிர்த்ததாகப் பேசிக் கொண்டார்கள்......

தீனதயாளுவின் 'ஏஜெண்ட்' ஆவலே உருவாக முதலாளிக்காகக் காத்துக் கொண்டிருந்தான். "இப்பவானும் வந்தீர்களே! நாழியாக ஆக, அவன் நழுவிவிட்டால் என்ன செய்வது என்று பதறியே போய் விட்டேன். நேர அவனிடம் போய்ப் பத்திரங்கள் கையெழுத்தான பின்தான் பாக்கி வேலை'' என்று துடி துடித்தான்.

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமற் போய் விடுமோ என்று பயந்தவர் போல் தீனதயாளுவும் அவனுடன் டாக்ஸியில் ஏறிக் கொண்டு, அந்த அப்பாவியின் வீட்டை நோக்கி விரைந்தார்.

ரந்தி தேவியை அழைத்துச் செல்ல, உள்ளூர் சமூக சேவகி ஒருத்தி வந்திருந்தாள், அவள் கொண்டு வந்திருந்த காரில் ஏறுமுன், ஏதோ பூர்வஜன்ம வாசனை போன்ற ஒரு உணர்ச்சி ரந்தி தேவியைத் தயங்கச் செய்தது.

"என்ன யோசனை!'' என்ருள், வந்திருந்தவள்.

"மதுங்காவிற்குப் போகலாமோ ...!'' என்று ரந்திதேவி மென்று விழுங்கி ஆரம்பித்த பொழுது, "அங்கெல்லாம் எதற்கம்மா!, வழக்கப்படி 'தாஜ்மஹால்' ஹோட்டலிலேயே ஏற்பாடு பண்ணியிருக்கிறேன், வாருங்கள் போவோம்'' என்று காரைக் கிளப்பினுள். ரந்திதேவியின் தயக்கம் வந்த சுவட்டிலேயே மறைந்து விட்டது.

விமான நிலையத்திலுள்ள தபால் ஆபீஸிலிருந்தே அமர்நாத் தன் மனைவிக்குத் தந்தி கொடுத்தான். அதன் வாசகம், "உன் தாலி பலம் எமனை வென்று விட்டது!'' என்பது தான்.

குழந்தைகளை அவர்களின் தந்தையிடம் ஒப்புவித்து விட்டுத் திரும்பிய 'ஏர் ஹோஸ்டஸ்' சுவாமிஜி விமானத்திலேயே இன்னும் உட்கார்ந்திருப்பதைக் கண்டு, அவர் அருகில் வந்தாள்.

"அடேடே! என்னென்னவோ எண்ணங்களில் என்னையே மறந்து இருந்து விட்டேன்'' என்று சொல்லிக் கொண்டே சுவாமிஜி எழுந்தார்.

"வேலை வரவில்லை, சுவாமிஜி!'' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே, அவரிடமிருந்து ஏர்ஹோஸ்டஸ் விடை பெற்றுக் கொண்டாள்.

கதோபநிஷத்தில் காலதேவன் நசிகேதஸ்ஸினிடம் சொல்லுகிருன்: "எப்பொழுது இதயத்திலுள்ள முடிச்சுக்கள் எல்லாம் இங்கேயே அவிழ்ந்து போகின்றனவோ, அப்பொழுதே சாகும் இயல்புடைய மனிதன் சாகாதவன் ஆகிருன்'' என்று. இதைச் சிந்தித்துக் கொண்டே நடந்து கொண்டிருந்த சுவாமிஜி, "உண்மையிலே இவர்கள் ஒருவருக்குமே இன்னும் வேலை வரவில்லைதான்'' என்று தமக்குள் சொல்லிக் கொண்டார்.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ



122.

ஒரு காதல் பேருரை

காவிய நாயகனாகிய ராமனைப் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், யுத்த காண்டம் என்ற ஐந்து காண்டங்களிலும் முக்கிய கதாபாத்திரமாக ஆதிக்கம் செலுத்தக் காண்கிறோம். சுந்தர காண்டத்தில் மட்டும் அனுமனே முக்கிய கதாபாத்திரம். இக் காண்டத்திற்குக் காவிய நாயகனே அனுமன் என்று கூடச் சொல்லி விடலாம்.

அனுமனுக்கு நன்றி

அனுமன் சீதையின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க வில்லை யென்றால் யுத்த காண்டமே அவசியம் இல்லாமற் போய் விடும். சீதையைத் தேடப் போனவன் ராம தூதனாகவும் தொண்டாற்றக் காண்கிறோம். அசோக வனத்தை அழித்துத் தன் வாலில் எதிரிகள் கொளுத்திய தீக்கு அவர்கள் ஊரையே இரையாக்கி ராமனது படையெடுப்பை எளிதாக்கி வைத்ததையும் காண்கிறோம்.

அனுமனது வெற்றியை அறிந்து கொண்டதும் பொங்கிய பெரு மகிழ்ச்சியில் ராமன் நன்றி தெரிவிக்கவும் மறந்துவிட்டான். ஆனால் காவிய நாயகி நன்றி செலுத்தியது என்றும் மங்காத ஒரு கவிச் சித்திரமாக அமைந்திருக்கிறது. சீதை தன் நாயகனை எப்படி மறக்கவில்லையோ, அப்படியே இந்த ராமதூதன் செய்த உதவியையும் மறக்கவில்லை.

'பிறந்தகம், புக்ககம் என்ற இரண்டு அகங்களுக்கும் ஓருங்கே துன்பம் விளை

த்து விட்டேனே: என் தந்தையின் கல்லெனத் திரண்ட தோளைக் கயிற்றினால் கட்டி யிருப்பதையும் காண்கிறேனே!' என்றெல்லாம் பிரலாபித்துக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலும் இவளது நன்றியுள்ளம் அனுமனை மறந்து விடவில்லை.

விட்ட இந்த ஆபத்தை நீங்கள் அறியவில்லையோ?' என்று கதறுகிறாள். 'அவர்களுக்கும் ஏதாவது ஆபத்து நிகழ்ந்து விட்டதோ?' என்றும் கவலைப்படுகிறாள்.

இந்தப் பெருங் கஷ்ட நிலையில் அனுமனை நினைத்துக் கொள்கிறாள். அங்கு நேர்ந்ததை இங்கே வந்தும், இங்கு நேர்ந்ததை அங்கே சென்றும் யார் எப்படித் தெரிவிப்பது?

அனுமனும் உளனோ
நும்பால்?

[நும்பால் – உம்மிடம்.]

என்று சீதை வருந்தும்போது சுந்தர காண்டத்திலே அனுமனது பேராண்மைப் பெருஞ் செயல்கள் நினைவுக்கு வந்திருக்க வேண்டுமல்லவா!



சித்ரலேகா

மூன்றே சொற்களில் அனுமவீரமும் சீதையின் நன்றியுணர்வும் ஒருங்கே பொங்கி அலை யெறியும் பெருங் கடலாக நம் மனக்கண் முன் தோன்றுகின்றன. எனினும் இந்த நினைவு ஒரு கணம்தான் சீதைக்கு இப்போது.

'இந்த நினைவு சற்று நீடிக்கக் கூடுமானால், இவள் இப்படி மேலும் தொடர்ந்து புலம்பி யிருக்க வேண்டாமே! அனுமனும் ராமனும் ஜனகனைக் கட்டிக் கொண்டு வந்தவர்களைச் சும்மா விட்டு வைப்பார்களா? இந்த வெற்றி-வெறியர்களின் தோள்களை எமபாசம் கட்டுமாறு செய்து விட மாட்டார்களா!

சீதையோ, ஜனகனைக் கட்டிக் கொண்டு வந்தவர்கள் பரதனையும் கட்டிக்கொண்டு வந்து விடுவார்கள் என்றே நம்புகிறாள். 'அண்ணனுக்கும் வாழக் கொடுத்து வைக்கவில்லை; ஐயோ, அந்தத் தம்பிக்கும் வாழ்வு இல்லாமல் போய்விடுமே! அறத்திற்குப் பலன் இதுவா!' என்று புலம்புகிறாள்.

கட்டுண்ட ஜனகன் புழுதியில் விழுந்து புரளுவதையும் பார்க்கிறாள். 'அன்னைமார்களே! பெரியோர்களே! ஆருயிர்த் தங்கைமார்களே! தந்தைக்கு நேர்ந்து

நரிக்குக் கொண்டாட்டம்!

இப்படியெல்லாம் சீதை ஏங்கிக் கொண்டிருப்பது அரக்கனுக்குக் கொண்டாட்டமாகிறது. 'ஜனகனைப் பாதுகாத்து இவளும் துன்பம் நீங்கி மேம்பட்டிருக்கும் வழி காட்டுவோம்'

என்று மனோராஜ்யம் செய்கிறான் அரக்கன்.

சிவபெருமான் கொடுத்த சந்திரஹாஸம் என்ற வாள் கையில் இலங்க, முகத்திலே மகிழ்ச்சி துலங்கச் சீதையை நோக்கி ராவணன் பேசத் தொடங்குகிறான். 'அழகிய பெண்ணே!' என்று விளித்துப் பேசுகிறான். 'காதல் விளைத்த இடர்தான் இது!' என்கிறான்.

சீதை—காதல் தனக்குத் துன்பம் விளைக்கத் தானும் இப்படி ஒரு துன்பத்தைச் செய்யத் தொடங்கி விட்டாளாம். 'நினைத்தற்கும் கூடாத பெரிய துன்பத்தைச் செய்யத் தொடங்கினேனே!' என்று அனுதாபமும் தோன்றப் பேசுகிறான்.

'மிகக் கொடிய துன்பமாயினும் உன் மீதுள்ள ஆசைதான் இதற்குத் தூண்டுகோல்' என்கிறான். 'இந்தப் பிழையை நீ பொறுத்துக் கொள்ள வேண்டும்' என்றும் மன்னிப்பு வேண்டுகிறான். 'பொறுத்துக் கொள்ளத் தான் வேண்டும்' என்ற காதலின் அதிகாரமும் தொனிக்காமல் இல்லை.

'மிதிலை மக்களை நான் வேரறக் கொன்று விட மாட்டேன்' என்று அன்பு கூர்ந்து வாக்களிக்கிறான். நான் சாவதாயிருந்தாலும் ஜனகனுக்கு உயிர்ப் பிச்சை கொடுப்பதாக உறுதி கூறுகிறான்.

அஞ்சலை அன்னம்
அன்னாய்!

[அஞ்சலை – பயப்படாதே. அன்னம் அன்னாய் – அன்னம் போன்றவளே.] என்று கொஞ்சுகிறான்.

ஜனகனுக்கு வந்த இந்தக் கஷ்டமே அதிர்ஷ்டமாகப் போகிறதாம். இனி ஜனகன் மிதிலை மன்னன் என்பதில்லை!

மண்ணுலகம் முழுதும் வேண்டுமானாலும் அவன் சுவாதீனமாக்கிக் கொள்ளலாம், விண்ணுலகம் வேண்டுமானாலும் ஆண்டு கொள்ளட்டும்என்கிறான். 'மூன்று லோகத்திலும் பரவி யிருக்கிறதே, இந்த என்னுடைய ஏகாதிபத்தியச் செல்வம் வேண்டுமானாலும் சரி, இதோ கொடுத்து விடுவோம்!' என்று எவ்வளவு தாராளமாய் எத்தகைய வண்மை பொழிகிறது ராவணன் வாக்கு!

சீதையையும் தொழுது வாழ்வதாக வாக்களிக்கிறான்.

தெய்வம் தொழாஅள்
கொழுநற்றொழுதொழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

என்ற அந்த வள்ளுவர் சட்டத்தைப் புரட்டித் தள்ளி இனி ஒரு விதி செய்து கணவனே மனைவியைத் தொழுது வாழ்வான் என்பதற்குத் தானே உதாரண புருஷனாகி வழி காட்டப் போவதாகச் சொல்லுகிறான்.

இந்தக் கருத்தை இவ்வளவு வெளிப்படையாகச் சொல்லி விடவில்லை.

தொழுது வாழ்வேன்

என்றுதான் சொல்லுகிறான். இவன் தொழ வேண்டாமென்று அவள் நினைத்தால், ஜனகனைத் தொழுது வாழவும் தயார் என்பது குறிப்பு.

ராட்சஸ மகாராஜ்யத்திற்கே ஜனகனை முடிசூட்டி வைப்பதாகச் சொன்னவன் தலைநகரமாகிய இலங்கையை ஜனகனுக்குக் கொடுத்து விட்டு இந்த நகரத்திலேயே தான் வாழப் போவதில்லை என்கிறான் :

இலங்கையூர் இவனுக்கு
ஈந்து வேறிடத்(து)
இருந்து வாழ்வேன்!

ஜனகனின் சாதாரணப் பிரஜைகளில் ஒருவனாக ராவணன் வாழ முயன்றாலும் இலங்கையூரில் வசிக்கப் போவதில்லை என்கிறான். ஏன் இந்தத் தியாகம்? புதிய சக்ரவர்த்தி தன்னைக் கண்டு பயந்து கொண்டே ஆட்சிசெலுத்த வேண்டாமே!

'தேவேந்திரன் தலையிலுள்ள கிரீடத்தைப் பறித்து இவன் தலையில் சூட்டுவேன்; அந்த இந்திர பட்டத்தையே அவனுக்குக் கட்டிவிடுவேன்; வேத மந்திர கோஷங்களுடன் முறைப்படி முடிசூட்டு விழாவை நடத்தி வைப்பேன்' என்கிறான்.

கடைத் தேங்காயை வழிப் பிள்ளையாருக்கு உடைக்கும் இந்தக் காரியத்திலே, வைதிகச் சடங்கு, தட்சிணை உள்ளிட்ட அம்சம் ஒன்றிலும் சிறிதும் குறைவின்றி நடைபெறும் என்ற குறிப்பையும் காண்கிறோம் ராவணன் வாக்கிலே.

தெய்வப் பெண்களெல்லாம் பந்த விட்டது போலச் சூழ்ந்து வணங்கித் துதிப்பார்களாம்; ஜனகனைப் புதிய இந்திரனாக ஒப்புக் கொண்டு பணி செய்வார்களாம். அந்தப் பணியாளர் கூட்டத்தில் தானும் அடிமையாகக் கலந்து பணி செய்யச் சித்தமாக இருப்பதாகவும் தெரிவிக்கிறான் ராவணன்.

ஆசை பேசுகிறது!

தான் இவ்வளவும் செய்வதற்குச் சீதை என்ன செய்ய வேண்டும் என்பதை

யும் தெரிவிக்கிறான். இவள் பூர்ண சம்மதமும் தெரிவிக்க வேண்டியதில்லையாம்:

இந்திரன் கவித்த
மௌலி, இமையவர்
இறைஞ்சி ஏத்த,

மந்திர மரபில்
சூட்டி, வானவர்
மகளிர் யாரும்

பந்தரின் உரிமை
செய்ய, யான் இவன்
பணியில் நிற்பன் !

சுந்தரப் பவள
வாயால் ஒருமொழி
சிறிது சொல்லின் !

[கவித்த மௌலி – சூடியுள்ள கிரீடத்தை. இமையவர் – தேவர்கள். மந்திர மரபில் – வேத மந்திரத்தோடு மரபிற்கு இணங்க. பந்தரின் – பந்தல் போலக் கவிழ்ந்து கொண்டு. உரிமை – உரிய பணி.]

இவ்வளவு விலையும் சீதையின் ஒரு மொழிக்குக் கூட அல்ல! அந்த ஒரு மொழியையும் இவள் பூர்ணமாகச் சொல்லிவிட வேண்டியதில்லையாம்.

அதைச் சிறிது சொன்னாலே போதும், —'மையல் – பேதை மாதர் மிழற்றும்' அந்த ரிரம்பா மென் சொல் என்று மழலைச் சொல்லால், அந்தச் சுந்தரப் பவள வாயால்?

தேவ மகளிர் அடிமைகளாகப் பணி செய்வார்கள் என்று சொன்னவன், அந்தக் கூட்டத்தில் மகாலட்சுமியும் கலந்து கொள்வாள் என்கிறான்!

அமிழ்தில் வந்த மகாலட்சுமியும் அடிமையாகிப் பணிசெய்ய வேண்டியதுதான் என்று சொல்லுகிறவன், 'ஒரு வேளை சீதையே மகாலட்சுமியாக இருந்து விட்டால்!' என்ற வினாவையும் தன் உள்ளத்திலே எழுப்பிக் கொண்டுதான் வந்ததைப் பூர்த்தி செய்கிறான்:

செந்திரு நீர்அல்—
லீரேல், அவளும்வந்(து)
ஏவல் செய்யும்!

[செந்திரு – சிவந்த அழகிய திருமகள்.]

முடிவுரை

இந்தப் பேருரையின் முடிவுரையையும் இப்போது கேட்டு விடுவோம். 'ஜனகன் புதிய தேவேந்திரனாகி விண்ணும் மண்ணும் பாதாளமும் ஒருங்கே திரண்டு வந்து முடி சூடிய முகத்தைப் பார்க்கவும் கூசிப் பாதங்களை நோக்கி வணங்கி ஏவிய பணிகளைச் செய்வார்கள்' என்று சொல்லிவிட்டு, 'உன்னை மகளாகப் பெற்ற அதிர்ஷ்டம் தான் ஜனகனை அப்படியெல்லாம் உயர்த்திவிடப் போகிறது!' என்று சொல்லப் போகிறவன், இரண்டு வாக்கியங்களுக்கும் இடையே

பாவை நீ !

[பாவை – சித்திரப் பதுமை போன்றவள்.]

என்று சீதையை நோக்கிக் கூறுகிறான்.

'உன் அதிர்ஷ்டத்திற்கும் உன் தந்தையின் அதிர்ஷ்டத்திற்கும் காரணம் உன்னுடைய இந்த அழகுதான்!' என்பது குறிப்பு.

முடிவுரையின் முடிவான வாக்கியம் தான் ராவணனுடைய நாவன்மையை எவ்வளவு பிரமாதமாகத் தூக்கிக் காட்டுகிறது!

'மூவுல(கு) ஆளும்
செல்வம் கொடுத்(து) அது
முடித்தி' என்றான்.

[முடித்தி–முடிப்பாய்.]

'உன் தந்தைக்கு, எந்தத் தந்தைக்கும் எந்த மகனும் மகளும் செய்திராத பெருதவியை நீ செய்யப் போகிறாய்!' என்கிறான். இந்த அழகியைப் பெற்ற பாக்கியசாலி மிதிலை மன்னனாக எங்கேயோ பூவுலகின் ஒரு மூலையில் ஒதுங்கி ஒடுங்கிக் கிடந்தால் போதாது என்கிறான்.

மூன்று லோகத்தையும் ஆளும் செல்வத்தை அவனுக்குக் கொடுத்துத் தான் ஆக வேண்டும் என்கிறான். அதைத் தான் கொடுப்பதாகச் சொல்லவில்லை; அந்தக் கொடை சீதை கையில் தானிருக்கிறதாம்.

'மூவுலகு ஆளும் செல்வம் கொடுத்து அது முடிப்பாய்' என்றானே, அது எது! 'நீ ஜனகனுக்கு மகளாகத் தோன்றிய அந்த அதிர்ஷ்டப் பயனை முடித்து வைப்பாய்' என்றுதான் சொல்லுகிறான! அல்லது

சுந்தரப் பவள
வாயால் ஒருமொழி
சிறிது சொல்லின்

என்றானே, அந்த வேண்டுகோளை முடித்து வைக்க வேணும் என்று பொருள்படத் தான் பேசி முடித்தான!

பையிலிருந்து ஏதோ ஒரு காகிதத்தை எடுத்துப் பார்த்துவிட்டு, "உங்கள் பெயர் கணேஷ்தானே!" என்று கேட்டார்.

"ஆம்!" என்றான் கணேஷ் ஆச்சரியத்துடன்.

"நீங்கள் இருப்பது நுங்கம்பாக்கத்தில்—ஐம்புலிங்க நாயக்கன் தெருவில்தானே?"

"ஆம்!"

"நீங்கள் இப்பொழுது பி. எஸ்ஸி. படித்துக் கொண்டிருக்கிறீர்கள், இல்லையா?"

"ஆமாம்! இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

அந்த மனிதர் தம் கையிலிருந்த கவருக்குள்ளிருந்து ஒரு சிறிய போட்டோவை எடுத்து கணேஷிடம் கொடுத்து, "இது உங்கள் போட்டோதானே, பாருங்கள்! நான்தான் ஆத்மநாதன்" என்றார்.

இப்பொழுது எனக்கும் கணேஷுக்கும் விஷயம் தெளிவாகி விட்டது. தனக்கு விவாகம் தேவையில்லை என்று சொல்லி விட்டு, என்னை விவாகச் சுழலில் சிக்க வைத்த கணேஷ், இப்பொழுது எதிர்பாராத வகையில் மாட்டிக் கொண்டது எனக்கு மிக ஆறுதலை அளித்தது. நான் புன்சிரிப்புடன் அவனைக் கடைக் கண்ணால் பார்த்தேன். அவன் என் பக்கம் திரும்பவே யில்லை!

"கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரி ஆகி விட்டது! ஒன்பது மணிக்கு மேல் உங்களை வந்து சந்திக்கலாம் என்றிருந்தேன்......" என்றார் ஆத்மநாதன்.

"நல்ல வேளை; வீண் அலைச்சல் இல்லாமற் போயிற்று. உங்களுக்குக் கடிதம் எழுதிய பின்னர் நான் மனத்தை மாற்றிக் கொண்டு விட்டேன். வேலை கிடைத்த பின்னரே கல்யாணம் செய்து கொள்ளுவது என்று முடிவு செய்திருக்கிறேன். இதற்காக நீங்கள் என் மீது கோபித்துக் கொள்ளக் கூடாது" என்று தழுதழுத்த குரலில் கணேஷ் வேண்டினான்.

"வேலையைப் பற்றிய கவலையை விடுங்கள். எனக்கு ஹேமா ஏக புத்திரி. என் சொத்து பூராவும் அவளுக்குத்தான். மாப்பிள்ளையாக வருகிறவர் என் 'மெடிகல் ஷாப்'பை நிர்வகிக்கக் கூடியவராக இருக்க வேண்டும் என்பது என் இஷ்டம். அதனால் தான் 'பி. எஸ்ஸி. அல்லது எம். பி. பி. எஸ். படித்த மாப்பிள்ளை தேவை' என்று விளம்பரம் செய்தேன்" என்றார் ஆத்மநாதன்.

"கணேஷ்! நீங்கள் இரட்டை அதிருஷ்டசாலி! வேலைக்கு வேலை; கல்யாணத்திற்குப் பெண்—இரண்டும் சேர்ந்தே கிடைக்கின்றன!" என்று புன்சிரிப்புடன் கூறினார் பெரியவர்.

"சந்தேகமில்லாமல்!" என்று நான் ஆமோதித்தேன்.

பிறகு, பெரியவர் ஆத்மநாதனின் காதுக்குள் ஏதோ குசுகுசு வென்று கூறினார். ஆத்மநாதன் உள்ளே எழுந்து போய் விட்டு வந்தார். மறு நிமிஷமே ஹேமா கையில் வெற்றிலைத் தட்டுடன் தோன்றி, அதை கணேஷின் முன்னிருந்த 'ஸ்டூ'வின் மேல் வைத்து விட்டுச் சென்றாள். மின்னல் தோன்றி மறைந்தது போன்ற உணர்ச்சி கணேஷின் மனத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதை அகல விரிந்த அவன் கண்கள் வெளிப்படுத்தின.

நான் புன்சிரிப்புடன் கணேஷைக் கடைக் கண்ணால் பார்த்தேன். அவனும் இந்தத் தடவை என்னைக் கடைக் கண்ணால் பார்த்துப் புன் முறுவல் செய்தான். எங்கள் பார்வையும், புன் சிரிப்பும் ஒன்றாயிருந்த மாதிரியே எங்கள் மனத்தில் நிரம்பியிருந்த எண்ணங்களும் சம நிலையில் சீக்கிரமாக நிறைவேறின!

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

123. பொய்த் திருவும் மெய்த் திருவும்

'மூவுலகு ஆளும் செல்வம் கொடுத்து, அது முடிப்பாய்!' என்று ராவணன் சொன்ன முடிவுரை வாக்கியத்தின் முற்பகுதிக்குச் சீதை முதன் முதல் பதில் சொல்லுகிறாள். அந்த 'மூவுலகு ஆளும் செல்வம் இந்திரனுக்கே உரியது: அந்தக் கடைத் தேங்காயை நீ எந்தவழிப் பிள்ளையாருக்கும் உடைக்க முடியாது!' என்கிறாள்.

ஆவேசப் பேருரை

இலங்கையையும் ஜனகனுக்குக் கொடுக்கத் தான் சித்தமாயிருப்பதாகச் சொன்னானல்லவா! 'இந்தச் செல்வமும் உனக்கு உரியதன்று!' என்று ராவணனும் திடுக்கிட்டுப் பேசுகிறான். அதற்கு உரிமையே இல்லை; இதற்த உரிமையை நீ இழந்து விட்டாய்!' என்றாள்.





[இத்திரு — இந்த மூவுலகுச் செல்வம். பெறுகிற்பானும்—பெறப் போகிறவனும். நுங்கள் பொய்த்திரு — உங்களுடைய பொய்ச் செல்வமாகிய இந்த இலங்கைச் செல்வம். புலவர் கோமான் — அறிஞர் தலைவன்.]

என்று சீதை பேசத் தொடங்குவதே ராவணனுக்கு எவ்வளவு வயிற்றெரிச்சலை மூட்டி விடுகிறது!

இந்தப் படலத்தின் தொடக்கத்திலே சீதை பேசத் தொடங்கும்போது, தரையிலே கிடந்த அற்பத் துரும்பு ஒன்றைப் பார்த்துக்கொண்டே ராவணனையும் அத்தகைய துரும்பாக மதித்துப் பேசினாள் அல்லவா! இப்பொழுது வந்த தைரியமோ, ராவணனைத் துச்சமாகப் பார்த்தே பேசுமாறு செய்துவிடுகிறது.

தன்னுடைய ஆட்சி இலங்கையை ராஜதானியாகக் கொண்டு உலகங்களையெல்லாம் அடக்கி ஆளுகிறது என்பதைத் தெளிவுபடுத்தினான். அந்தப் பெரிய மகா ராஜ்யத்திலே இலங்கை என்ற அரக்கர் பேரூரை மாத்திரம் தனக்கு வைத்துக்கொண்டு எஞ்சிய பெரும் பகுதியையும் சீதையின் தந்தைக்குக் கொடுத்து விடுவதாக முதல் முதல் தெரிவித்தான்.

அதே மூச்சில் தொடர்ந்து,

இலங்கையூர் இவ
னுக்(கு)
ஈந்து வேறிடத்(து)
இருந்துவாழ்வேன்

என்று தங்கள் இலங்கைச் செல்வத்தைச் சிறப்பாகக் குறிப்பிட்டான் அல்லவா! அதைத்தான் சீதை 'நுங்கள் பொய்த் திரு' என்று சுட்டிக்காட்டி, 'இந்தப் பொய்த் திருவும் புனிதமாகப் போகிறது பேரறிஞனான விபீஷணன் வசமாகும்போது' என்று தெளிவுபடுத்துகிறாள் ராவணனுக்கு.

இத்திருப் பெறுகிற்—
பானும் இந்திரன்;
இலங்கை நுங்கள்
பொய்த்திருப்பெறுகிற்
—பானும் விடணன்
புலவர் கோமான்

ராவணன் செல்வம் இழந்து உயிரையும் இழக்கப் போகிறான் என்ற குறிப்புடன் நின்று விடாமல் இதை மேலும்

பயங்கர விவரங்களுடன் தெளிவுபடுத்து கிருள். 'நெருப்பைக் கக்கிக் கொண்டு வரும் ராம பாணங்களே உன்னோடு சிரித்து உரையாடும்!' என்கிருள். கோதண்டத்தின் பயங்கர டங்காரங்களை யும் நினைவூட்டுகிருள்.

"காகங்கள் உன்னுடைய கண்களை மூக்கி னுல் கொத்தித் தோண்டிப் புசிக்கப் போகின்றன; பேயும் பிடுங்கித் தின்னப் போகிறது!" என்றெல்லாம் பயங்கர உரைகள் வழங்குகிருள்.

பேசுவது சீதாலட்சுமிதானு! போரின் பயங்கர அதி தேவதையான துர்க்கா தேவி இரத்த வெறி கொண்ட அலறலைத் தான் கேட்கிரேமா!

ராவண கோபமும் குறுக்கிட்டு இப் பேச்சைத் தடுத்துவிட வில்லை. சீதையின் பேச்சு முற்றுப் பெற்ற பின்பே ராவண கோபமும் வெளிப்படுகிறது.

வார்த்தையாக வெளிப் படவில்லை; செயலாகத்தான் வெளிப்படப் போகி றது. 'இவளைக் கொன்று விடுவோம்!' என்றே கிளம்பப் போகிருன். அப்படி ஒரு கோபத்தைத் தூண்டும்படி இவள் சொல்லி முடித்த அந்த முடிவுரைதான் என்ன!

'அற்பச் சிறியோனே!' என்று விளித் துக் கூறும் முடிவுரை இது:

'புன்மக! கேட்டி
கேட்டற்(கு) இனியன;
புகுந்த போரின்,
உன்மகன் உயிரை
எம்மோய் சுமித்திரை
உய்ய ஈன்ற
நன்மகன் வாளி
நக்க, நாய்அவன்
உடலை நக்க,
"என்மகன் இறந்தான்"
என்ன நீயெடுத்(து)
அரற்றல்!' என்ருள்.

[புன்மக — அற்பனை சிறு பயலே. கேட்டி — கேட்பாய். போரின் — போரிலே. எம்மோய் — எமது தாய். நன்மகன் — நற்குணமுள்ள மகனை லட்சுமணன். வாளி நக்க — அம்புகள் தீண்டி ஒழிக்க.]

சுமித்திரை, தானும் உலகமும் உய்யும் படி ஈன்றெடுத்த ஸத்புத்திரன் லட்சு மணன் என்று சீதை கூறுவதில், சீதைக்கு லட்சுமணன் மீதுள்ள விசுவாசம் வெளிப் படுவதுடன், ராவணனுல் கவரப்படுவ தற்கு முன் லட்சுமணன் மனம் புண்படத் தான் பேசியது குறித்த பச்சாத்தாபம் ஒரு வகைப் பக்தி யுணர்ச்சியாகப் புலனு வதையும் ஊன்றி நோக்கி நாம் உணர்ந்து கொள்ளக் கூடும்.

சீதையின் கோபாவேசப் பேச்சிலே யுத்த தேவியாகிய கொற்றவையின் ஆவேசமே குறுக்கிட்டு இந்திரஜித்தின் முடிவை முன்கூட்டியே ராவணனுக்கு அறிவித்து ஒரு பயங்கர எச்சரிக்கை செய்வது போலத் தோன்றுகிறது. இந் திரஜித்து லட்சுமணனுல் கொல்லப்படு வான் என்ற விவரத்தைக் கூட இங்கே காண்கிரேமல்லவா!

இந்திரஜித்தின் மரணத்திற்குப் பின், 'ஐயோ, என் மகன் இறந்து விட்டானே, என்றெல்லாம் புலம்பப் போகிருனே' அதையும் முன்கூட்டியே ஆருடம் சொல் வதுபோலச் சொல்லித் தீர்த்து விடுகிறது சீதையின் ஆவேசப் பேருரை. இந்த முடிவுரை கேட்டதும், 'சீதையையே முடித்து விடுவேன்!' என்று ராவணன் புறப்படுவது கூட, இந்திரஜித்தின் மர ணத்திற்குப் பிறகு நடக்கப் போகும் நிகழ்ச்சியை நினைவூட்டுகிறது.

ராவண கோபாவேசம்

தான் இறப்பது குறித்துச் சீதை பேசியது கூட ராவணனுக்கு இவ்வளவு கோபம் மூட்டிவிடவில்லை. தன் மகன் இறப்பது குறித்து இவள் பேசியதும், கண்களை ராவணன் உருட்டி விழித்ததே எவரையும் பயமுறுத்தியிருக்கக் கூடும்.

வெயில் புறப்பட விழிக்கிருனும். கண் களை யெல்லாம் மலர விழித்துக்கொண்டு. இருபது வீரக் கைகளும் ஒன்றையொன்று பிசைகின்றனவாம். பிளந்த வாயில் பற் கள் உதட்டை அழுந்திக் கவ்வுகின்றன வாம்.

இப்படிக் கவிதைக்குச் சரியான பொழிப்புரை கூறினுலும் இந்த ராவண கோபத்தை உள்ளபடி காட்டியதாகுமா!

வெய்யவன் அனைய
கேளா, வெயில் உக
விழித்து, விரக்
கைபல பிசைந்து,
பேழ் வாய் எயிறுபுக்(கு)
அழுந்தக் கவ்வி

[வெய்யவன்-கொடியவனுன ராவணன். அனைய — அவ்வாருன வார்த்தைகளை. கேளா-கேட்டு. வெயில் உக விழித்து— கடுமையான வெயில் வெளிப்பட்டு விழு வது போலக் கண்களை அகலமாய்த் திறந்து பார்த்து. பேழ் வாய்—பிளவு

பட்ட வாயில். எயிறு—பற்கள். புக்கு அழுந்த—போய் அழுந்தும்படி.]

என்ற கவிதா ரூபத்திலே தான் ராவண கோப வெறியை அப்படியே கண்டு கொள்ள முடிகிறது.

தந்தையே வேண்டுகிறான்!

இத்தகைய கோபத்துடன் ராவணன் சீதையைக் கொல்லச் செல்வதும், மகோதரன் தடுப்பதும் படுவேகமாய் நடந்து முடிகின்றன. எப்படித் தடுக்க முடியும் இந்தச் சந்தர்ப்பத்திலே! என்ன சொல்லித்தான் தடுக்க முடியும்!

படு வேகத்திலும் படு வேகமான ஒரு மின்னல்—வேகத்திலே ஆலோசனை வந்து பாய்கிறது மகோதரன் மூளையில்:

தையல் மேல் ஓட —
லோடும் மகோதரன்
தடுத்தான், 'ஈன்ற

மொய்கழல் தாதை
வேண்ட இசையும்; நீ
முனியல்' என்றான்.

[மொய் கழல் தாதை — நெருங்கிய வீரக்கழல் அணிந்த தந்தை. முனியல் — கோபித்துக்கொள்ள வேண்டாம்.]

மகோதரன் எதிர் பார்த்த படியே தாதையும் வேண்டிக் கொள்கிறான்

ஆவிபோய் அழிதல்
நன்றோ? அமரர்க்கும்

அரசன் ஆவான்
தேவியாய் இருத்தல்
தீதோ?

என்ற கேள்வியைச் சீதைக்கே போடுகிறான்.

மாயா ஜனகனைச் சந்தேகிக்கிறாளா?

காதில் விழுந்ததோ, இல்லையோ!— சீதை காதுகளை அழுந்தப் பொத்திக் கொள்கிறாள். 'உயிரையே விடுகிறாளோ!' என்று சொல்லும்படி ஒரு பெருமூச்சு விடுகிறாள். சோகத்திலிருந்து உயிரை மீட்டுக்கொள்கிறது கோபம்.

இவ்வுரை எந்தை
கூறான்!

என்று கம்பீரமாய்ச் சொல்லுகிறாள்.

'இந்த வார்த்தையைச் சொன்னாயே நீ ஜனகனா!' என்று கேட்கிறாள்.

திறம்கெட, ஒழுக்கம்
குன்றத், தேவரும்
பேணத் தக்க

நிறம்கெட இனைய
சொன்னாய்; ஜனகன்கொல்,
நினையின் ஐயா?

[நிறம் — அழகு; சிறப்பு. இனைய — இவ்வாறான வார்த்தைகளை. நினையின் — நினைத்துப் பார்க்கும்போது.]

இன்னும் கேள்விகள். 'நீ என் கண்ணெதிரே இறந்தால் தான் என்ன!' என்கிறாள். 'உன் சுற்றத்தார்களும் என் கண்ணெதிரே இறந்தால் தான் என்ன!' என்று கேட்கிறாள்:

நீயும், நின் கிளையும்,
மற்(று)இந் நெடுநில
வரைப்பும் நேரே

மாயினும், முறைமை
குன்ற வாழ்வனோ?

இந்தச் சோக வெறியிலே ஒரே நினைவுப் பாதை தெளிவாய்த் தெரிகிறது சீதைக்கு.

நாயினை நோக்கு —
வேனோ, நான்துறந்(து)
ஆவி நச்சி?

[நச்சி — விரும்பி.]

என்று ராவணன் முன்பே ராவணனை இப்படிக் குறிப்பிட்டவள், மாயா ஜனகனை நோக்கி,

அரியொடும் வாழ்ந்த
பேடை அங்கணத்(து)
அழுக்குத் தின்னும்

நரியொடும் வாழ்வ —
துண்டோ? நாயினும்
கடைப்பட் டோனே!

[அரி—ஆண் சிங்கம். பேடை—பெண் சிங்கம். அங்கணத்து—சாக்கடையில்.]

என்று பேசுவதைக் கேளுங்கள்.

"நாயினும் கடைப் பட்டோனே!" என்று அழைக்கும் போதாவது 'இவன் ஜனகன் இல்லையோ?' என்ற சந்தேகம் வருகிறதா! ஜனகனாகவே யிருந்தாலும் தகாத வார்த்தை சொன்ன தந்தையின் உறவையும் அறுத்துப் பேசுகிறாள் என்று கருதுவது பொருந்துவதே.

சத்திய விரோதமாகத் தரும விரோதமாகப் 'புத்தி' சொல்லும் தாய் தாயல்ல, தந்தை தந்தையல்ல என்ற தத்துவம் சீதையின் உரையில் வெளிப்படத்தான் செய்கிறது.

124. நாடகம் முடிகிறது

ராவணன் கும்பகர்ணன் மீதுள்ள நம்பிக்கையால் வெற்றியை எதிர்பார்த்த வண்ணம் சீதையிடம் வந்து காதல்–வார்த்தைகளைப் பேசத் துணிந்து காலில் விழுந்து மன்றாடிய போது, சீதை அவனுக்குப் பெருங் கோபத்தை மூட்டும் ரீதியில் பதில் சொல்லிவிட்டாள். ராமன் மீது தனக்குள்ள காதலையும் வற்புறுத்தி அவனை உயிரோடு வதைத்து விட்டாள்!

எனினும் எப்படியும் வசப்படுத்திக் கொள்வோம் என்ற நம்பிக்கையுடன் ராவணன் தன் கோபத்தை ஒருவாறு மட்டுப்படுத்திக் கொண்டு அயோத்தியிலும் மிதிலையிலும் ராட்சஸப் படையெடுப்பு நிகழ்ந்து விட்டதென்று சொல்லி அந்தப் பொய்யுரைக்கே கோபத்தின் ஆவேசத்தைப் பயன்படுத்திக் கொண்டான்.

கட்டுண்ட மாயா ஜனகனைத் தந்தையென்று மயங்கிச் சீதை புலம்பும்போது ராவணன் மறுபடியும் ஆசை வார்த்தைகள் பேசச் சீதை மறுபடியும் பெருங் கோபத்தை மூட்டிவிடுகிறாள். 'சீதையையே கொன்று விடுவோம்' என்று ராவணன் தன் ஆசையையும் மறந்து புறப்படும் அளவிற்குக் கோபம் மூண்டு விடுகிறது. இது ராவண கோபத்தின் உச்ச நிலை.



சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

மருத்தன் வெற்றி!

மாயா ஜனகன் தகாத வார்த்தை சொல்லச் சீதை கனன்று பேசியதும், ராவண கோபம் ஜனகனையே கொன்று தீர்த்து விடுவோம் என்று தீர்மானிக்கிறது. 'இவ்வுரை எந்தை கூறான்!' என்று சீதை சொல்லித் தந்தையையும் துறக்கத் துணிந்தாளல்லவா? ராவணன் 'இன்று இவன் ஜனகன் இல்லை போலும் என்று நீ சொல்லுகிற இந்த ஜனகனை இப்போதே வெட்டிப் பலி கொள்வேன்' என்று சொல்லி வாளை உருவிக் கொள்கிறான்.

மாயா ஜனகனைப் பற்றிய சந்தேகம் சீதைக்கு இருந்தாலும் இல்லாவிட்டாலும், இப்போது ராவணனுக்கு அந்தச் சந்தேகமே இல்லையென்று தோன்றுகிறது!

சந்தேகம் இருந்தால் வாளை உருவி மருத்தனைப் போன்ற விசேஷ ஆற்றலுள்ள ஒரு கலைஞனைக் கொல்லச் சித்தமாகி விடுவானா? மகோதரன் தடுத்து விலக்கிய பின்பே அந்தக் கொலை முயற்சியிலிருந்து திரும்புகிறான். இப்படி ராவணனையும் மயக்கி விடுகிறது மருத்தனின் நடிப்புக் கலை.

ஒரு வெள்ளைத் தோட்ட முதலாளியாக நடித்த வங்காளி நடிகன் ஒருவனது நடிப்புக் கலைத் திறமையில் மயங்கி ஈசுவர சந்திர வித்தியாஸாகரர் என்ற வங்க நாட்டுப் பேரறிஞர் அந்த நடிகன் மீது தன் கால் செருப்பு ஒன்றைக் கழற்றி வீசி விட்டார். இந்தச் செருப்பு வீச்சு வங்காளி நடிகனின்

கலைத் திறனுக்குச் சான்றானது போல், மருத்தனின் கலைத் திறனுக்கு ராவணனது கொலை முயற்சியே சான்று தருகின்றது. (பரிசு கூட இத்தகைய சான்றாகாது!)

இத்தகைய நடிகனைக் கண்டு பிடித்து ராவணனுக்குப் பயன்படச் செய்தது மகோதரன் மேதை. இதே மேதை ராவணனது கொலை முயற்சியிலிருந்து மருத்தனைக் காப்பாற்றவும் போகிறது.

ராவணனுடைய மயக்கம் சீதையையும் மயக்கி விடுகிறது. மாயா ஜனகன் வார்த்தையிலிருந்து அவனைப் பற்றி ஏற்பட்டிருந்த சந்தேகத்தைத் துறந்து விட்டவள் போல்,

என்னையும் கொல்வாய்,
இன்னே; இவனையும்
கொல்வாய்

[இன்னே — இப்பொழுதே; இவ்விடத்திலேயே,]
என்று சொல்லுகிறாள்.

'முதல் முதல் என்னைக் கொன்று விட்டு உடனே இவனையும் கொன்று விடு' என்றல்லவா சொல்லுகிறாள்! ஆனால் ராவணன் உருவிய கத்தியைப் பிரயோகிப்பதற்குள் மகோதரன் ஜனகனுக்குப் பரிந்து பேசுகிறான்.

"ஜனகன் இப்போது பிழையொன்றும் செய்ய வில்லையே. உனக்காகத் தன் புதல்வியை இரந்து வேண்டிக் கொண்டது பிழையா!" என்கிறான்.

மேலும் ஒரு முக்கியமான விஷயத்தை ராவணன் ஆலோசித்துப் பார்க்க வேண்டும் என்கிறான். இது தான் ராவணனைக் கட்டுப்படுத்துகிறது.

'சீதை எப்படியும் உன் அதீனத்தில் வருவது நிச்சயம், நீ பகைவனான ராமனை வென்ற போது அவள் உனக்குச் சொந்தமாகி விடுவாள். ஆனால் அப்போது தந்தையை இழந்த மனத் துயரம் இருப்பது நல்லதா!' என்பது மகோதரன் வாதம்.

இப்படிச் சொல்லி மகோதரன் விலக்க, ராவணன் அந்தக் கொலை முயற்சியை விட்டு மறுபடி



யும் ஆசனத்தில் போய் அமர்ந்து கொள்கிறான்.

இப்படி நடக்கிறது இந்த மருத்த – ஜனக நாடகம். ஆனால் இது முடிவு பெற வேண்டுமே, இன்னும் நீண்டு கொண்டே போனால் நாடகம் சுவை யிழந்து விடுமே.

எதிர்பாராத முடிவு

எவ்வளவு கலைத் திறமையோடு கம்பன் இந்த நாடகத்தை முடிக்கிறான் பாருங்கள்! ராவணன் போய் உட்கார்ந்ததுதான் தாமதம்—உருவிய வாளை உறையில் போட்டானோ இல்லையோ என்பது சந்தேகம் — இருவகைக் கோஷங்கள் காதில் விழுகின்றன.

வானவர்களின் ஆரவாரம்: வானரர்களின் ஆரவாரம். அடிமைத் தேவர்கள் தங்கள் அடிமைத் தளைகள் முறிந்து விழுந்தது போல் அப்படிக் கோஷிப்பானேன்!

ஆனால் வானரர்களின் கோஷம் ராவணனுள்ளத்திலே 'கும்பகர்ணன் வெற்றி பெறவில்லையோ!' என்ற சந்தேகத்தை எழுப்பி விடுகிறது.

இப்போது ராம லட்சுமணர்களின் வில் நாணொலிகளும் காதில் விழுகின்றன. சேனை அழியத் தம்பி தனிமைப்பட்டிருக்கிறானே!

'சமயத்தில் நான் அவனுக்கு உதவி செய்யாமல் இங்கே இப்படி வீணாகப் பொழுது போக்கிக் கொண்டிருக்கிறேனே!' என்ற பச்சாத்தாபம் ஏற்பட்டு நெஞ்சு பொருமுகிறது.

கும்பகர்ணன் தீர்ந்தே போனான் என்பதை ராவணன் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. ராட்சஸ சேனை புறங்கொடுத்து ஓடுகிறது; உள்வாங்கும் சமுத்திரம் போல் கோட்டை அரண்களுக்குள்ளே பதுங்கப் பார்க்கிறது. இதையும் ராவணன் தெரிந்து கொள்ளவில்லை.

இந்தச் சேனா சமுத்திரத்தினிடையே சிறைப்பட்டது போலச் சிக்கிக் கொண்டார்கள் ராவணனிடம் வந்து செய்தி சொல்ல வேண்டிய தூதர்கள். அலை சுருட்டிப் பின்வாங்கும் சமுத்திரத்தால் உள்ளே இழுக்கப்படுவது போல், இந்தத் தூதர்களும் இழுக்கப்படுகிறார்கள்!

எனினும் செய்தி சொல்லித் தீர வேணுமே; தலை போகிற காரியமல்லவா! எப்படியோ அந்தச் சேனா சமுத்திரச் சிறையிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு கால் பூமியில் பாவாமலே பறந்து வரும் பட்சிபோல வந்து சேர்ந்து விடுகிறார்களாம் தூதர்கள்.

இந்தப் பரிதாப நிலைமையிலும் என்ன விரைவு!—ஆ, என்ன நிதானம்! என்ன செய்தி!—அதைச் சொல்லும் திறமை தான் என்ன?

புறம்தரு சேனை
 முந்நீர் அருஞ்சிறைப்
 போக்கி, போதப்

பறந்தனர் அனைய
 தூதர் செவிமருங்(கு)
 எய்தி, பையத்,

'திறம்திற மாக
 நின்ற கவிப்பெருங்
 கடலைச் சிந்தி

இறந்தனன் உம்பி;
 அம்பில் கொன்றனன்.
 இராமன்' என்றார்.

[புறம் தரும் – (இங்கே) தோற்று முதுகு காட்டி ஓடிப்போகும். சேனை முந்நீர் – சேனைக் கடல். அருஞ்சிறை – அரிய சிறைக் காவல். பறந்தனர் அனைய தூதர்– பறந்து வந்ததுபோல் விரைந்து வந்தவராகிய தூதர்கள். செவி மருங்கு–செவிக்குப் பக்கத்திலே. திறம் திறமாக–கூட்டங் கூட்டமாக. கவிப் பெருங் கடலை – வானர சேனையாகிய சமுத்திரத்தை. சிந்தி – சிதறடித்து. உம்பி – உமது தம்பி.]

ராவணன் தனியாகவா இருக்கிறான்! மகோதரன் இருக்கிறான்—பாதகமில்லை! மந்திரி தானே. சீதை இருக்கிறாள் — அவளுக்குத் தெரியலாமா இந்தச் செய்தி? திரிஜடை இருக்கிறாள் – விபீஷணனுடைய மகள் அறிந்து கொள்ளலாமா?

ஜனகனும் வந்திருக்கிறானே, என்ன அதிசயம்! ஏதோ ஒரு விசேஷம் இருக்கத்தான் வேணும். ஒரு நாடகம் கூட நடக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டார்களோ, இல்லையோ? பார்த்தும் பார்க்காதது போல் இருக்கவும் தெரியும் இவர்களுக்கு.

'நாம் உண்டு; நமது கடமை உண்டு' என்பது போல் நடந்து கொள்ளும் இத் தூதர்கள் இரகசியமாகச் செய்தி சொல்ல விரும்புகிறார்கள். அதற்காக 'ஐயா, தயவு செய்து இப்படி வாருங்கள் ஒரு தனி இடத்திற்கு' என்று கூப்பிட முடியுமா பிரதாப லங்கேச்வரனை.

பரிதாப லங்கேச்வரன்தான் இப்போது! என்றாலும் இன்னும் லங்கேச்வரன் தானே! செவிக்குப் பக்கத்தில் போகிறான் ஒரு தூதன்; பையப் பேசுகிறான்.

ராவணன் தான் ஏற்கெனவே தேவ-வானர கோஷங்களையும் வில் நாண் ஒலிகளையும் கேட்டிருக்கிறானே. அவன் இவர்களுடைய செயலை விபரீதமான பொருள் உடையதென்றே கருதி யிருக்கவேண்டும்.

தூதர்களோ தம்பி வதமான செய்தியை எவ்வளவு பக்குவமாக, | எவ்வளவு சாமர்த்தியமாகத் தெரிவிக்க முடியுமோ அவ்வளவு சாமர்த்தியமாகத் தெரிவிக்க வேண்டு மென்றே திட்ட மிட்டுக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

பையச் செவிக்குள்ளே செய்தி சொல்லுகிறவன், தூதர்களின் சார்பில் கும்பகர்ணனுடைய வெற்றியைத்தான் எடுத்த எடுப்பிலே பேசுகிறான்.

திறம்திற மாக
நின்ற கவிப்பெருங்
கடலைச் சிந்தி

என்று தானே சொல்லுகிறான்!

ஆனால் கும்பகர்ணன் கொல்லப்பட்ட செய்தியை யல்லவா தெரிவிக்க வந்திருக்கிறார்கள்! கொல்லப்பட்டான் என்பதை முதல் முதல் சொல்லி விடாமல் 'இறந்தனன்' என்றுதான் சொல்ல வேண்டும் என்பது திட்டம்.

'வெற்றி வீரனாகிய கும்பகர்ணனா இறந்தான்! இறந்தது யாரோ!' என்று கூட ராவணன் ஐயப்படும்படி பேசுகிறான் தூதர்களின் பிரதிநிதி. ஆனால் சந்தேகத்தையும் விரைவில் போக்கிவிட வேணுமே! எனவே,

இறந்தனன் உம்பி

என்கிறான்.

அப்படியானால் கொல்லப்படவில்லையா! நோயுற்று இறந்தானா!—மாரடைப்பால் திடீர் மரணம் நேர்ந்திருக்குமோ!

இறந்தனன் உம்பி
அம்பில்

என்கிறார்கள்.

'அம்பினால் இறந்தானா! வானரப் பெருங்கடலைச் சிந்தி வெற்றி பெற்றவன் அம்பினால் இறந்தான் என்றால் ஏதோ ஒரு அம்பு தற்செயலாக மருமத்தில் பட்டிருக்கக் கூடும்; அல்லது யாரோ ஒருவன் மறைந்திருந்து அம்பு போட்டிருக்கவும் கூடுமே.

இறந்தனன் உம்பி;
அம்பில் கொன்றனன்
இராமன்

என்கிறான் தூதன்.

மரம் சாய்கிறது!

தூதன் சொல்லி முடிப்பதற்குள்ளே ராவணனுக்குத் தெரிந்து விட்டது, கும்பகர்ணன் ராமனால் கொல்லப்பட்டான் என்ற செய்தி. ராவணன் அப்படியே சாய்ந்து விழுகிறான். என்ன வீழ்ச்சி!

மூவுலகின் தனி நாயகம் என்பதற்கு அறிகுறியான மணிக்கிரீடம், அழகிய வேலைப்பாடமைந்த பொன் மாலையால் சுற்றப்பட்டு முடியை அலங்கரிக்கத் தான் செய்கிறது. ஆனால் அந்த மணி முடியும் முடிமாலையும் இப்போது எவ்வளவு கனமாகி விட்டன!

அந்தக் கிரீடமும் மாலையும் இப்போது தரையிலே தள்ளி விடுகின்றன பிரதாப லங்கேச்வரனைப் பரிதாபமாக.

காட்டு ராஜாவாகிய ஒரு மகாவிருட்சம் விழுவதுபோல விழுகிறானும்;

ஊரொடும் பொருந்திக்
தோன்றும் ஒளியவன்
என்ன ஒண்பொன்

தாரொடும் புனைந்த
மௌலி தரையொடும்
பொருந்தத் தள்ளப்,

பாரொடும் பொருந்தி
நின்ற மராமரம்
பணைகளோடும்

வேரொடும் பறிந்து
மண்மேல் விழ்வதே
போல விழ்ந்தான்,

[ஊர் – ஊர்கோள்; (இங்கே) பரிவேஷம். ஒளியவன் – (இங்கே) சூரியன். தார் – மாலை. பார் – பூமி. பணை–கிளை. பறிந்து – பறியுண்டு.]

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

125. அழச் செய்தவன் அழுகிறான்

பிரிவையே அறியாத சகோதரர்கள்: உடம்புதான் இரண்டு, உயிர் ஒன்றே! இப்படி எந்த இரண்டு சகோதரர்களைக் குறிப்பிடக் கூடும் என்று கேட்டால், ராம லட்சுமணர்களைத் தானே சுட்டிக் காட்டுகிறார்கள்!

ராவணனுக்கும் ஒரு லட்சுமணனா?

ராவண கும்பகர்ணர்களும் 'ஆவி ஒன்றே' என்று கருதும்படி பிரிவு நேராமலே வாழ்ந்திருந்தார்கள் இதுவரையிலும். இப்போதுதான் பிரிவு நேர்ந்திருக்கிறது. இந்தப் பிரிவு நேரும்படி செய்தது மரணம்தான்!

விபீஷணன் ராவணனிடமிருந்து பெரும்பாலும் பிரிந்தே சென்று கொண்டிருந்தான். ஜீவ யாத்திரையில் அவன் வழி வேறு; அரக்கர் கோனின் வழி வேறு. இரண்டு யாத்திரை–மார்க்கங்களும் சந்திப்பது எப்படி?

ராவண பவனத்திற்கும் விபீஷண பவனத்திற்கும் இடையே தூரம் அதிகமில்லை. ஆனால் இதயப் பிரதேசத்திலே தூரம் கொஞ்சமா?

கும்பகர்ணனோ! விபீஷணனை நேசித்த போதிலும், விபீஷணனது தரும லட்சியத்தில் அநுதாபம் கொண்டிருந்த போதிலும், ராவணனை இதயப் பிரதேசத்திலும் பிரிந்து போய் விடவில்லை; இலங்கை நகரை விட்டே வெளிப்படாமல் 'தானுண்டு, தன் படுக்கை உண்டு' என்று ராவணனுக்குச் சமீபத்திலேயே இருந்து விட்டான்,

'அப்பேர்ப்பட்ட அருமைத் தம்பி என் பொருட்டல்லவா என்னைப்



பிரிந்துபோய் விட்டான்!' என்று கதறுகிறான் ராவணன் :

எறிவரும் அமரில்
தம்பி தன்பொருட்(டு)
இறந்தான் என்ன,
அறிவழிந்(து) அவச—
னாகி அரற்றினன்,
அண்டம் முற்ற!

[எறிவரும்—படைக்கலங்களை வீசி யெறிகிற. அமரில்—போரில். என்ன—என்று தூதர் சொல்ல. அறிவு அழிந்து—அறிவு கெட்டு. அவசனாகி—துக்க பரவசனாகி. அரற்றினன்—வாய் விட்டுக் கதறலானான். அண்டம் முற்ற—அண்டத்தின் மேல் முகட்டிலும் போய்க் குரலோசை முட்டும்படி.]



பெரும்பாலும் ராவணனுடன் ஒத்துப் போய் 'நானும் இளவரசுதானே' என்ற கௌரவமும் பாராட்டாது அவனுக்கு ஒரு பணியாளன் போல் உழைத்து வந்தவன் கும்பகர்ணன். ராமனிடம் லட்சுமனன் காட்டிய சகோதர வாஞ்சையும் இதுதானே!

அண்ணனுக்குத் தம்பியென்று தன்னை மதித்து விடாமல், ராமனுக்கு அடியான் என்ற நினைப்பிலேயே அடிமைத் தொழில் புரிவது போல் கைங்கரியம் செய்வதைப் பேரின்பமாகக் கொண்டிருந்தான் லட்சுமனன் என்பது ராமாயணப் பிரசித்தமான செய்தி.

ராமனைத் தசரத ராஜகுமாரன் என்று சொல்லி விட்டுத் தன்னை அவனுக்குப் பணியாளனாகவே அறிமுகப்படுத்திக் கொள்பவன் லட்சுமனன். அதே மனப் பான்மையைக் கும்பகர்ணனிடத்திலும் கண்டு காட்ட விரும்பியது கம்பனின் மேதை.

எத்தனையோ போர்களில், ராமனுக்கு லட்சுமனன் போல் ராவணனுக்குப் பணி செய்து கொண்டிருந்தான் கும்பகர்ணன்; அந்தப் போர்களில் ராவணனுக்கு வெற்றி கிடைக்கவும் பேருதவி செய்தான்.

ஆனால் ராவணன் சீதையைக் கவர்ந்தது வீரத்திற்கு இழுக்காகுமென்று கருதிய கும்பகர்ணன் 'இந்தப் போரை நடத்த வேண்டாம்' என்றே ஆலோசனை சொல்லிப் பார்த்தான்.

'நீ செய்யும் காரியம் வீர தர்மம் அன்று' என்று சொல்லி எச்சரிக்கை செய்த பின்பும் ராவணனிடம் மனமாற்றம் ஏற்படவில்லையென்று கண்டு இப்போரில் தானும் ஈடுபட்டு உயிர் துறந்தான். ஆகவே 'தம்பி தன்பொருட்டு இறந்தான்' என்ற செய்தி ராவணனை இப்படி அலறச் செய்து விடுகிறது.

வீரமும் மானமும் பூசலிடுகின்றன!

'இறந்தனன் உம்பி' என்று ஜாக்கிரதையாகத் தூதர்கள் சொன்ன அந்த வார்த்தை ராவணன் — இதயத்திலே 'உன் பொருட்டு இறந்தான் உன் தம்பி' என்று இடித்துக் காட்டுவது போல வந்து விழுந்தது. ஏதோ ஒரு பயங்கரமான கொலைக் கருவியை அந்தச் செய்தி சொன்ன தூதன் தன் இதயத்திலே குறி பார்த்து விசியது போலத் தோன்றியது ராவணனுக்கு.

பெருந் துயரத்தால் இவன் மண்மேல் விழுந்து விட்டதால் தான் அந்தத் தூதர்கள் உயிர் தப்பினார்கள்,

எம்பி ஒ! யான்உன்னை
இவ்வுரையும் கேட்டேனோ?

[எம் பி ஒ — என் தம்பியே ஐயோ!] என்று கதறுகிறவன் இந்த வார்த்தை சொன்னவர்களை மறந்து விடுகிறான்.

'சீதையை விட்டுவிட வேண்டும்; அல்லது நமது வலிமை முழுவதையும் ஒரு சேரப் பகைவர் மீது செலுத்த வேண்டும்' என்று கும்பகர்ணன் புத்தி சொன்னதும் ராவணன் சினந்து சீறி, 'நீ போ; நான் சண்டைக்குப் போகிறேன்' என்று சொல்லி விட்டானல்லவா!

அப்போது தனது வலிய நீண்ட சூலாயுதத்தை வலப்புறத்திலே கொண்டு கும்பகர்ணன் தான் ஒப்புக்கொள்ளாத அந்தப் போருக்கு இசைந்து புறப்பட்டு விட்டான். அந்தக் காட்சியை ராவணனால் எப்படி மறக்க முடியும்!

அப்போதே இரத்தக் கண்ணீர் வந்து விட்டது ராவணனுக்கு. இப்போது 'அந்த வேற்படையும் கையுமாக நான் உன்னைச் சாகும் தருணத்திலும் மறுபடியும் பார்த்தேனில்லையே!' என்று புலம்புகிறான்.

'என் உயிர்தானே எனக்குப் பெரிதாகி விட்டது!' என்கிறான். 'அந்த ஐராவத யானை மேல் ஏறிக் கொண்டு இனி மேல் இந்திரன் தன் பொன்னுலகத்தில் மீண்டும் புகுந்து விடமாட்டானா?' என்றும் பிரலாபிக்கிறான்.

ராவணனும் யாரைப் பலி கொடுத்தாவது தனது நலத்தையும் மாட்சியையும் பேணக் கூடியவன்தான். எனினும்,

வன்னெஞ்சின் என்னை நீ
நீத்துப்போய்
வான்அடைந்தால்,

இன்னம் சிலரோ(டு)
ஒருவயிற்றின்
யார்பிறப்பார்?

[வன்னெஞ்சின் என்னை — வன்னெஞ்சு உள்ள என்னை. நீத்துப் போய்—விட்டுப் போய்.]

என்று கதறுவதில் எவ்வளவு சகோதர வாஞ்சையை வெளியிடுகிறான்!

மறுபடியும் சகோதர உணர்ச்சியைக் காட்டிலும் மான உணர்ச்சி மேலிடுகிறது.

'மானுடன் வில் ஒன்று உன்னைக் கொன்று விட்டதே !' என்கிறான்.

இந்தச் சொல் நெருப்பாய்ச் சுடுகிறதாம்:

சொல்அன்றோ என்னைச்
சுடுகின்றது? தோன்றல் !

[தோன்றல் – தோன்றலே ; குணங்களில் சிறந்தவனே.]

என்று புலம்புவதைக் கேளுங்கள்.

'மனிதர்களின் வெற்றியைக் கண்டும், ராவணனார் தமது தோள்களை — இரண்டுக்கு இருபதாக உள்ள தோள்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறாரே' என்று தானே சொல்லிக் கொள்கிறான்.

தன் காமத்தைக் கூடப் பரிகசித்துக் கொள்கிறான் ; 'இந்தப் பெண்பித்து என்னை என்ன பாடுபடுத்தி வைக்கிறது ! என்னைச் சேர்ந்தவர்களை இழக்கச் செய்து விட்டது; கும்பகர்ணன் கரன் முதலான தம்பி மார்களையும் இழக்கச் செய்து விட்டது !. சூர்ப்பணகையின் மூக்கு அறுபடவும் நேர்ந்தது' என்றெல்லாம் புலம்புகிறான். இவன் எதிர்பார்த்த தென்ன ! நடந்ததென்ன !

'தன்னைத்தான், தம்பியைத்தான்
தானைத் தலைவனைத்தான்,
மன்னைத்தான், மைந்தனைத்தான்
மாருதத்தின் காதலைத்தான்,
பின்னைக் கரடிக்(கு)
இறையைத்தான் பேர்
மாய்த்தாய் !'
என்னத்தான் கேட்டிலேன்,
என்னுனை வா(று)இதுவே?

[தன்னை – (இங்கே) ராமனை. தம்பியை – லட்சுமணனை. தானைத் தலைவனை – சேனாதிபதியான நீலனை. மன்னை– வானர மன்னனாகிய சுக்கிரீவனை. மைந்தனை – அவன் மைந்தனான அங்கதனை. மாருதத்தின் காதலை – வாயு புத்திரனான அநுமனை. பின்னைக் கரடிக்கு இறையை – மற்றும் கரடிகளுக்கு இறைவனான ஜாம்பவானை. பேர் மாய்த்தாய் – அவர்கள் பேரையும் அழித்து விட்டாய். என்னுனைவாறு – எவ்வாறுனது.]

என்று பிரலாபிப்பதைக் கேளுங்கள்.

சீதை இருந்த இச் சோலையில் 'மருத்த – ஜனக நாடகம்' பார்க்க வந்திருக்கிறானே, இப்போது இவன் எதிர்பார்த்தது கும்பகர்ணனது மரணச் செய்தியா ! ராமனது மரணச் செய்தியைத் தான் எதிர் பார்த்திருந்தானும்.

அது தான் இல்லையென்றால் லட்சுமணனைக் கும்பகர்ணன் வதைத்தான் என்ற செய்தியாவது காதில் விழுந்ததா ! வானர மகா ராஜாவையோ, சேனைத் தலைவனையோ, அங்கதனையோ கும்பகர்ணன் கொன்று விட்டான் என்ற செய்தியையாவது கேள்விப்பட்டானு !

தூது வந்து ஊரைக் கொளுத்திய அந்தக் குரங்கைக் கூடக் கொல்ல முடியவில்லையே ! கும்பகர்ணனால் காலம் கண்ட கிழட்டுக் கரடியான ஜாம்பவானைக் கூடக் கொல்ல முடியவில்லையே !

விதி விபரீதமா சட்டமா?

அவர்களை அழித்து, அவர்கள் புகழையும் அழித்து, அவர்களுடைய பெயர்களையும் அழித்து விடுவான் தம்பி என்று இவன் எதிர்பார்த்திருக்க, விதி செய்த விபரீதம் தான் என்ன !

கும்பகர்ணன் உறங்கிக் கிடப்பானே அந்த அணியரங்கத்தின் நினைவு வருகிறது. அதைத் 'தென்றல் வாழும் அணி அரங்கு' என்கிறான். அந்தத் தென்றல் தவழவும், மகளிர் கால் பிடிக்கவும், மலரணையில் (பூம்பள்ளியில்) பள்ளி கொண்டிருப்பானும்.

ராவணன் அந்த வழியாகப் போகும் போதும், வரும்போதும் எத்தனை தடவை பார்த்திருக்கிறான் ! இப்பொழுது 'எங்கே, எப்படி நித்திரை செய்துகொண்டிருக்கிறாயோ தம்பி !' என்று புலம்புகிறான்.

பூம்பள்ளியில் கிடந்தவன் இப்போது புழுதிப் படுக்கையில் படுத்துக் கொண்டானே ! அடிவருடும் ஏழைமகளிருக்குப் பதில் பேய்களல்லவா சூழ்ந்து கொண்டிருக்கும் !

இப்படி அழுது தன் பெயரின் காரணத்தைப் பலரும் அறியச் செய்கிறான் என்பது கவிக்கூற்று. அழச் செய்தவன் இப்போது தானே அழுகிறான் என்பது குறிப்பு.

ராவண கோபத்தையும், மகோதரனது தந்திரப் பேச்சு சீதையை மறுபடியும் திகிலடையச் செய்வதையும், திரிசடை சீதையைத் தேற்றுவதையும் இனி நாம் பார்க்கிறோம்.

126. மூவர் நோக்கிய போர்க்களம்

கும்பகர்ணனது மரணம் ராவணனது சோகத்தை விரைவில் பெருங் கோபமாக மாற்றி விடுகிறது. 'இனி எல்லாரையும் தீர்த்து விடுவேன்!' என்று சீறுகிறான்.

ஆனால் தேவர்கள் சாவா மருந்தாகிய அமிர்தத்தைச் சாப்பிட்டிருக்கிறார்கள்; ராவணன் கொன்றாலும் சாக முடியாதவர்கள்! எனவே 'தேவரையும் மூவரையும் சிறை வைப்பேன்' என்கிறான்.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ



கோபத்தீயில் காணும் களம்

'ஐயோ, செத்துப் போனாலும் பாதகம் இல்லையே! உயிரோடு வதைக்கிறார்களே ராவணனுடைய சிறை அதிகாரிகள்' என்று அவர்களைக் கதறச்

செய்து விட்டதாகவே ராவணன் எண்ணம்!

தீயணைப்பு யந்திரங்களால் அணைக்க முடியாத தீயாகி விடுகிறது ராவண கோபம். எனினும் மகோதரன் என்ற பெரிய யந்திரம் வேலை செய்யும் போது கொஞ்சமாவது பலன் ஏற்படாதா! தேவரையும் மூவரையும் பொசுக்குவோம் என்று ஓங்கிய அந்தத் தீ இப்போது மண்ணளவிலே நின்று மனிதரைச் சூழ்ந்து கொள்ளப் பார்க்கிறது. மனிதர்களிலும் ராம லட்சுமணரையே நோக்கிப் படர்கிறது.

ராம லட்சுமணரையும் இப்போது சுட்டுப் பொசுக்க விரும்பவில்லை ராவணன் கோபம். 'வெட்டித்தள்ளி, அந்த இரத்தத்தைத் தேக்கி மூன்று முறை அந்தச் செந்நீரை இறைத்துத் தர்ப்பணம் செய்வேன் என் தம்பிக்கு!' என்று விழித்துத் தீயைக் கக்கும் வார்த்தைகளை வாரி இறைத்துப் போய் விடுகிறான் ராவணன்.


மருத்த–ஜனக நாடகத்தை அப்படியே மறந்து போய் விடுகிறான். சீதையையும் மறந்து தான் போய் விடுகிறான். 'மருத்த ஜனகனே மாயா ஜனகன் தான்!' என்று சீதை நினைத்து விடுவாளோ என்ற நினைப்பும் இப்போது இல்லை ராவணனுக்கு.

ஆனால் மகோதரன் எவ்வளவு ஜாக்கிரதையாக நடந்து கொள்கிறான்! கும்பகர்ணன் இறந்து விட்டானே என்ற வருத்தம் இவனுக்கும் உண்டு. இவன் தானே உறக்கத்தில் இருந்தவனை விழிப்பே இல்லாத உறக்கத்திற்கு அனுப்பியவன்!

நெஞ்சு பதைத்தது. கழுகுகள் கும்பகர்ணனுடைய பெரும் பிணம் கண்டு எவ்வளவு ஆசையோடு வட்டமிடும்! இந்த நினைவும் வந்தது. எனினும் — 'இவனைச் சிறையில் அடைத்து வையுங்கள்; விரைவாகத் தள்ளிக் கொண்டு போங்கள்' என்று கட்டளையிட்ட பின்பே மகோதரன் போகிறான்.

ராவணன் ஒரு திசை நோக்கிப் போகிறான். மகோதரன் வேறொரு திசை நோக்கிப் போகிறான்.





மாறுேர் திசை நோக்கிப்
போனுர் மகோதரனுர்

என்று எவ்வளவு ரஸமாக மாயா ஜனக நாடகம் முற்றுப் பெறுகின்றது !

மகோதரனே, ராவணனே போர்க் களத்தை நோக்கிப் போகவில்லை. அமைச்சர்களையும் அந்தரங்கமானவர்களையும் கலந்து கொள்ளத்தான் ராவணன் போகிறுன்.

அந்தக் கூட்டத்தைக் கூட்டி வைப்பதற்கும், போரைத் தொடர்ந்து நடத்துவதற்கு உரிய வேறு காரியங்களைக் கவனிப்பதற்கும் மகோதரன் போயிருக்கிறுன் என்று கருதலாம்.

போர்க்களத்திலே, வட்டமிடும் கழுகுகளுக்குக் கீழே கிடக்கும் கும்பகர்ணனைச் சுற்றித்தான் வட்டமிடுகிறது ராவணன் உள்ளம். அந்தப் போர்க்களத்தை எப்படி மறக்க முடியும் !

தன் தம்பியை அவர்களால் காப்பாற்ற முடியவில்லையே என்ற கோபத்தில் ராவணன் எடுத்த எடுப்பிலே 'நீங்கள் என் கண்ணெதிரே நிற்காமல் எங்கேயாவது போய்த் தொலையுங்கள் !' என்று கர்ஜிக்கிறுன்.

அதிகாயன் ஆத்திரம்

இப்படி அந்தக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது அதிகாயன் பொறுமை இழந்து, போருக்குச் செல்லத் துடித்துக் கொண்டிருக்கிறுன்.

ராவணன் இக் கூட்டத்தினரைப் பரிகாசமாகப் பார்த்து 'நீங்களும் வீரர் குழுவில் வைத்து எண்ணப் படுகிறீர்களே !' என்கிறுன். 'ராம லட்சுமணர் இருக்கும் இடத்தில் போய் யாவரையும் கொன்று இங்கே மீளுவோம் என்று உரைத்த வீரப் பண்புடையவர்களே !' என்று அவர்களை அழைக்கிறுன்.

'உயிரைக் கொடுத்தாவது உரையைக் காப்பாற்ற வேண்டாமா ! நீங்கள் உங்கள் வீரத்தையும் கடமை உணர்ச்சியையும் கைவிடவில்லை என்பதை மெய்ப்பிக்க வேண்டும் ; போருக்குப் பயந்தால், சாவுக்கு அஞ்சினுல் ஓடி வந்து விடுங்கள்' என்று இடிக் குரலில் முழக்குகிறுன்.

அதிகாயனது மான உணர்ச்சியும் வீர உணர்ச்சியும் இந்த வார்த்தைகளால் பெரிதும் புண்படுகின்றன. ராவணனையே பழித்துரைத்துப் பதில் சொல்லப் போகிறுன் அதிகாயன்.

இந்தச் சபையில் தான் இருப்பதையும் மறந்து தானே ராவணன் அப்படியெல்லாம் பேசியிருக்க வேண்டும் !

'வானம் அஞ்சட்டும்; வையகம் அஞ்சட்டும் ; நான் அஞ்சுவேனு !' என்கிறுன் அதிகாயன். சிவன் அஞ்சினுலும், திருமால் அஞ்சினுலும் அதிகாயன் அஞ்சப் போவதில்லையாம்.

ராவணேசுவரனே தான் போருக்கு அஞ்சியதாக ஒப்புக்கொண்டு தன்னைப் பற்றி வெட்கமடைய வேண்டுமாம். ஆனுல் இந்த அதிகாயப் புலி அச்சம் அறியுமா !

'நான் அஞ்சினன்' என்(று)
நாணுக ! போர் உனை
யான் அஞ்சினன் என்றும்
இயம்புவதோ ?

[உனை – உன்னை ; உன்னைப் பற்றி. நாணுக – நீயே நாணம் கொள்க. போர் யான் அஞ்சினன் – போருக்குச் செல்ல நான் அஞ்சினேன். இயம்புவதோ – சொல்வது தகுதியா.]

என்று இவ்வளவு தைரியமாகப் பேசும் இந்த அதிகாயன் யார் !

இந்த வார்த்தையை ராவணன் இப்போ திருக்கும் கோபாவேச நிலையில் பொறுத்துக் கேட்டுக் கொண்டிருக்கிறுனே! அப்படிக் கேட்டுக்கொண்டிருக்க முடியுமா !

அதிகாயன் ராவணன் பிள்ளைதான். தானிய மாலினி என்றும் தானிய மாலை என்றும் சொல்லப்படும் மனைவிக்குப் பிறந்தவன். 'பெருந் தோற்றமுள்ள உடலுள்ளவன்' என்பது அதிகாயன் என்ற சொல்லுக்குப் பொருள்.

பருத்துக் கொழுத்து வளர்ந்திருக்கும் இந்தச் செல்லப்பிள்ளை ராவணனை நோக்கி இப்படிப் பேசுவதை ராவணன் பொறுத்துக் கேட்டான் என்பது மட்டுமில்லை, ராவணன் உவந்து கேட்டான் என்றே சொல்லவேண்டும்.

'அனுமனுல் தரையிலே தேய்க்கப் பட்ட அந்தப் பையனு நான் !' என்று அந்தத் தம்பியைப் பழித்தும் பேசுகிறுன் அதிகாயன். 'சில அற்பக் கணைகளால் வீழ்ந்து விட்ட உம்முடைய தம்பி கும்பகர்ணனைப் போல் என்னையும் எண்ணி விட்டீரா !' என்று கூட ஆத்திரத்தைக் கிளப்பி விடுகிறுன்.

இப்படிக் கேட்டும் ராவணனுக்குக் கோபம் வந்துவிடவில்லை. ஏன் ! அதே

மூச்சில் 'ராம லட்சுமணரின் புகழால் ஏய்க்கப் பட்ட அந்த விபீஷணத் தம்பி என்றே என்னை எண்ணி விட்டீரோ!' என்று கூடக் கேட்டு விட்டானல்லவா!

இந்த ஒரு வார்த்தையில் ராஜ பக்தியும் ராவண பக்தியும் நிறைந்த உள்ளம் பளிங்கில் தெரிவது போலத் தெரிந்து விடுகிறதல்லவா? அடுத்த வார்த்தையும் அதிகாயனது ராவணேச்வர பக்தியை நன்கு புலப்படுத்தி விடுகிறது.

'உம்முடைய தம்பியின் உயிருக்கு இறுதி செய்தவனுடைய தம்பி லட்சுமணனை நான் தொலைத்து விடுகிறேன்' என்று அதிகாயன் செய்த சபதத்திலேயே சித்தப்பாமீது இவனுக்குள்ள அபிமானமும் இனிது புலனாகி விடுகிறது.

ராமனைக் கொல்வதாகச் சபதம் செய்யவில்லை. இதனால் அதிகாயனுடைய ஆத்திரத்துடன் நிதான புத்தியும் புலனாகின்றது. தன்னால் இயலாத காரியத்தையும் செய்து விடுவதாக இவன் சபதம் செய்து விடவில்லையே!

'பையன் புத்திசாலியும் கூட!' என்று எண்ணுகிறான் ராவணன். ராமனைக் கொல்வதைக் காட்டிலும், அவன் தம்பியைக் கண்ணெதிரே கொன்று தான் தம்பியைப் பறி கொடுத்துப் பரிதவிப்பது போல் அவனையும் பரிதவிக்கச் செய்வது நல்லதென்று கருதுகிறான் ராவணன்.

இதே கருத்தை அதிகாயன் வெளியிடும் அந்தச் சபத வார்த்தையை அமுதமாய்ப் பருகுகின்றன ராவணன் செவிகள்.

உம்பிக்(கு)உயிர் ஈறுசெய்–
தான் ஒருவன்

தம்பிக்(கு)உயிர் ஈறு
சமைத்(து) அவனைக்

கம்பிப்பதோர் வன்றுயர்
கண்டிலனேல்,

நம்பிக்கொரு நன்மக –
னோ இனி நான்?

[உம்பிக்கு – உன் தம்பிக்கு. உயிர் ஈறு செய்தான் ஒருவன் – உயிருக்கு இறுதி செய்தவனான ஒருவனுடைய. உயிர் ஈறு சமைத்து – பிராண நாசம் செய்து. கம்பிப்பது ஓர் வன்றுயர் – அந்த ராமனை நடுங்கச் செய்ய வல்ல ஒப்பற்ற கொடுந்துயரை. கண்டிலனேல் – நான் செய்யாமல் போவேனாயின். நம்பிக்கு – ஆடவர்களில் சிறந்தவனுக்கு; (இங்கே) ராவணனுக்கு.]

'உம்முடைய தம்பிக்கு.........' என்று நேர் முகமாய்ப் பேசிக் கொண்டிருந்தவன் 'ராவண நம்பிக்கு நான் நன்மகனோ!' என்று முன்னிலையில் படர்க்கை வரப்) பேசுவதில் எவ்வளவு உணர்ச்சியைக் கொட்டிக் காட்டுகிறான்!

'நான் சொன்னபடி செய்யாவிட்டால் ராவண நம்பிக்கு நான் ஸத்புத்திரன் இல்லை' என்ற சபதத்தைக் கேட்டதும், அந்தப் பத்துத் தலை நம்பிக்கு உள்ளம் எப்படிக் குளிர்ந்து போயிருக்கும்!

அதிகாயனது முடிவுரையில் போர்க் கருவிகளின் கோஷமே கேட்கிறது:

வெட்டித்தரை யிட்டிரு
வில்லினரைக்

கட்டித்தரு வன்னிது
காணுதியால்

[வெட்டித் தரையிட்டு இரு வில்லினரைக் கட்டித் தருவன் – வானரர்களின் தலைகளை வெட்டித் தரையில் போட்டு விட்டு ராம லட்சுமணர் என்ற அந்த இரண்டு வில்லாளிகளையும் கட்டிக் கொணர்வேன். இது காணுதியால் – இந்த என் வலிமையைக் காண்பாயாக.] வாசித்து வாசித்து அனுபவிக்க வேண்டிய கவிதைப் பகுதி இது.

ராவணன் உவந்து விடை கொடுக்க, அதிகாயன் போருக்குச் சித்தனாகிக் களம் நோக்கிச் செல்லுகிறான். யானைப் படையும் வேறு படைகளும் உடன் செல்லுகின்றன.

யானைகளின் முழக்கங்களும் வில்நாணியைத் தெறிக்கும் ஓசைகளும் கடல் அஞ்ச முழங்குகின்றன. போர் முரசுகள் இடிக் குரலில் அதிகாயன் வருகையை அறிவிக்கின்றன.

விண் நடுங்க மண் நடுங்கக் காலை மாறி மாறி வைத்துக் காலாட் படை வீரர்கள் நடந்து போகிறார்கள். அதிகாயனது தேரை ஓட்டிப் பல தேர்கள் போகின்றன. பெரு விசையோடு குதிரைகள் பாய்ந்து செல்லும் போது கால்கள் பூமியில் படுவதே தெரியவில்லை!

கும்பகர்ணன் உயிரிழந்த அந்தப் போர்க்களம் அதிகாயனை மனம் புழுங்கச் செய்து பெருங் கோபத்தையும் மூட்டி விடுகிறது. கும்பகர்ணனது தலையைக் காணவில்லை. 'அதோ அம்புகளுடன் மேடாகத் தெரிகிறதே அது ஒரு திடல் அன்று; என் சித்தப்பாவின் உடம்பு தான்!' என்று பெருமூச்சு விடுகிறான்.

* * *

சீதையும் இந்தப் போர்க்களத்தைக் கண்டாள் என்றால் அது ஓர் அதிசயமல்

லவா! இவளும் கும்பகர்ணனைக் காண்கிருள்; தலையிழந்த முண்டததையல்ல; முழு கும்பகருணனையேதான்!

கும்பகர்ணன் இறந்து விட்டானே என்று ராவணன் புலம்பியபோது சீதையிருந்த மன நிலையில் விஷயம் உடனே விளக்கி விடவில்லை. 'சண்டை நடக்கிறது கும்பகர்ணனுக்கும் ராமனுக்கும் இடையே என்றுதான் அரைகுறையாக அந்த விஷயத்தைக் கிரகித்துக் கொண்டாள்.

அந்தப் போர்க்களம் கண்ணெதிரே ஓடி வந்து விடுகிறது. கும்பகர்ணனைப் பார்க்கிருள்; ராமனையும் பார்க்கிருள். அப்படியே நடுங்கிப் போகிருள்;

கண்டாள் கருணனைத், தன்
  கண்கடந்த தோளானை;
கொண்டாள் ஒரு துணுக்கம்.

[கருணன் – கும்பகர்ணன். தன் கண் கடந்த தோளான் – தன் கண்ணுக்கு அடங்காத தோளழகு படைத்த ராமனை. துணுக்கம் – நடுக்கம்.]

தன்னுடைய அழகனுக்கு எதிரே கும்பகர்ணனின் பிரமாண்டத் தோற்றம் கண்டு, பேரன்பு பேரச்சம் விளைக்க, சீதை நடுங்கிப் போகிருளாம். ஆனால் சௌந்தரியத்திலே மறைந்திருந்த சக்தி நினைவிற்கு வந்ததும் 'என் கொற்றவனுக்கு வெற்றி தவிர வேறு என்ன தான் நேர்ந்து விடும்!' என்கிருள்.

'ராமபாணம் குறி தவருது' என்ற நினைவும் வருகிறது. இதே கணத்தில் அந்தப் பாணம் கும்பகர்ணனைத் தீர்த்து விட்டது' என்ற ராவணன் வார்த்தையும் செவியில் விழுகிறது. 'அது ஒப்பற்ற வார்த்தை' என்று இதயம் மகிழ்ந்து போகிறது.

அந்தப் பூரிப்பிலே 'உடல் தடித்தாள் சீதை' என்கிறது கவிக் கூற்று:

தண்டாத வாளி
  தடிந்த தனிவார்த்தை
உண்டாள், உடல்தடித்தாள்,
  வேறுருத்தி ஒக்கின்ருள்.

[தண்டாத வாளி – தவருமல் அழிக்க வல்ல பாணம். தடிந்த – வெட்டி வீழ்த்திய. தனி – ஒப்பற்ற.]

கற்பனைச் சிகரத்திலே நின்று காணும் இக்காட்சியில், சீதையை 'உடல் தடித்தாள், வேறுருத்தி ஒக்கின்ருள்' என்று கூறும் துணிவு கற்பனையின் சிகர ஜோதி.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

127. படுகளக் காட்சிகள்

வானர ராட்சஸ யுத்தம் மும்முரமாக நடைபெறுகிறது. வானரர்களுக்குத் தலைமை வகிக்கிறான் லட்சுமணன்; அரக்கர்களுக்குத் தலைமை வகிக்கிறான் அதிகாயன்.

வானரங்களின் பரிதாப நிலை

இரத்தம் வெள்ளமாய்ப் பெருகுகிறது.

காஸ்படக் கைபடக்
கால பாசம்போல்
வால்படப் புரண்டனர்
நிருதர்; மற்(று)அவர்
வேல்படப் புரண்டனர்
கவியின் விரரே.

[நிருதர் – அரக்கர்கள். கவியின் வீரர்–வானர வீரர்கள்.]

இரத்த வெள்ளம் அதிகரிக்கிறது. அதிகாயன் மேலும் மேலும் சுறுசுறுப்பாகிறான். வானரங்கள் வலி தாற்ற ஓடுகின்றன. வானர பயத்தைத்தான் எவ்வளவு 'தத்ரூபமா'ய்க் காட்டுகிறது இந்தக் கவிதைப் பகுதி!

கோல்பிடித்(து) ஒழுகுறு
குருடர் கூட்டம்போல்
வால்பிடித்(து) ஒழுகின
கவியின் மாலையே!

[ஒழுகுறு – செல்லுகின்ற. ஒழுகின–சென்றன கவியின் மாலை – வானரத் தொகுதிகள்.]

ஒன்றின் வாலை ஒன்று பிடித்துக் கொண்டு வானரங்கள் செல்லுகின்றன என்று கூறுவதில், நகைச் சுவையுடன் வானர சுபாவம் நன்கு வெளிப்படுகிறது. கோல் பிடித்துச் செல்லும் குருடர் கூட்



டம் போல் 'குரங்கின் கூட்டமும் வால் பிடித்துப் போகிறதாம்,—காலைப் பிடித்து இழுத்துக் கொண்டு பெருகுகின்ற இரத்த வெள்ளத்தினிடையே.

லட்சுமணனுடைய வில்நாண் ஒலிதான் வானர பயத்தை ஒருவாறு தெளிவிக்கிறது. லட்சுமண பாணங்கள் அரக்கர்களைக் கூட்டங் கூட்டமாக அடித்து வீழ்த்துகின்றன. எனினும் சின்ன பின்னப்பட்ட அரக்கர் சேனை அதிகாயன் முன்வரப் பின் தொடர்ந்து வந்து லட்சுமணனைத் தாக்குகிறது.

அதிகாயன் வதம்

இப்போது அதிகாயனை லட்சுமணன் வினவுகிறான்: 'உன்னுடைய சேனைகளெல்லாம் முற்றும் அழிந்த பிறகே நீ போர் செய்வாயா! அல்லது உடனே நீ என்னுடன் போர் செய்ய வருகிறாயா!'

இதற்கு அதிகாயன் பதில் சொல்லுகிறான். 'எனக்கு இந்தப் படை வீரர்களின் உதவி தேவையில்லை. நீயும் நானும் போர் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆவல். உனக்குக் காவலாக எத்தனை பேர் வந்து சேர்ந்தாலும் எனக்குச் சம்மதம் தான்!'



இப்படிச் சொல்லிவிட்டு அதிகாயன் தன் சங்கை எடுத்து ஊதுகிறான். லட்சுமணன் புன்சிரிப்புடன் சரமாரி பொழிகிறான்.

கடைசியாகப் பிரமாஸ்திரத்தைப் பிரயோகிக்கிறான் லட்சுமணன்.

குன்றினும் உயர்ந்த
தோளான் தலையினைக்
கொண்(டு)அவ் வாளி
சென்றது விசும்பி—
னூடு; தேவரும்
தெரியக் கண்டார்.

[அவ்வாளி – அந்த அம்பு. விசும்பினூடு – ஆகாயத்தினிடமாக.]

அதிகாயனுக்குப் படைத்துணையாக வந்திருந்த அரக்கர் தலைவர்கள் பலரும் இந்தப் போரில் வதமாகிறார்கள். லட்சுமணன் அடைந்த வெற்றி அங்கதன் முதலானவர்களைப் பெரிதும் உத்ஸாகப் படுத்திவிட்டதால், அங்கதனே லட்சுமணனை நோக்கி வந்த நராந்தகனைக் கொன்று விடுகிறான்.

அங்கதனைப் பின்பற்றி நீலன் முதலானவர்களும் அரக்கர் தலைவர்களைப் போரில் கொன்று விடுகிறார்கள். சுக்கிரீவனும் இந்தப் போரில் ஒரு முக்கியமான பங்கெடுத்துக் கொள்கிறான்.

போரின் கொடுமை

இந்தப் போர்க்களம் வீரத்தைக் காட்டிலும் கொடுமைகளுக்கும் பயங்கரமான சில உண்மைகளுக்கும் ஒரு சான்றாகக் காண்கிறது. எத்தகைய தரும யுத்தத்திலும், கருணைக் கடலான கடவுளே அவதாரம் செய்து நடத்திய அறப் போரிலும் கொடுமைகளுக்கும் யுத்த பயங்கரங்களுக்கும் குறைவில்லை

யென்பது நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடமாகும்.

ஓடிக் கோட்டைக்குள் பதுங்கி உயிர் தப்ப வேண்டுமென்ற நோக்கத்துடன் போனவர்களிலும் சிலர் நகர வாசலில் நெருக்கத்தினால் அழிந்து போகிறார்களாம். தங்கள் படை வீட்டில் அடைக்கலம் புகுந்தவர்களில் சிலர் போரில்பட்ட காயத்தினால் இரத்தம் இழந்து மாண்டு போகிறார்களாம்.

சிலர் ஓடும்போதே உயிரை விடுகிறார்கள். சிலர் தப்பிப் போகும்போதே அறிமுகமா யிருப்பவரை நோக்கி, 'உடம்பிலே தைத்திருக்கும் அம்பைப் பறித்து விடுங்கள்' என்று வேண்டிக் கொள்ள, அவர்கள் வந்து பறித்தவுடனேயே உயிரை விடுகிறார்களாம்.

குதிரை மீது தப்பி ஓடிய சிலர், அக் குதிரைகள் இறந்து விழ, ஒன்றும் தோன்றாது அப்படியே நின்று பதைக்கிறார்களாம். யானை மீது வந்தவர் சிலர், அந்த யானைகள் உருண்டு விழக் காலால் நடந்து போகிறார்கள்.

சில அரக்கர்கள் தப்புவதற்கு வேறு வழி யில்லாமல், வானர வேஷம் போட்டுக் கொள்கிறார்களாம். இந்தப் போலி வானரங்களை நிஜ வானரங்களென்று நம்பி மற்ற அரக்கர்களே கொன்றொழித்து விடுகிறார்களாம்.

தண்ணீர்! தண்ணீர்! தண்ணீர்!

ஒரு பிரேதத்திற்கு அருகே உறவினர் சிலர் உட்கார்ந்து கொண்டு வருந்திக் கொண்டிருக்கிறார்கள். பிரேதம் கண்ணைத் திறக்கிறது! 'உயிர் இருக்கிறது; நல்ல காலம் தான்' என்று ஆறுதல் அடைகிறார்கள் அந்த உறவினர்கள்.

இரு கண்களும் திறந்து நோக்குகின்றன. உறவினர்களுக்கு நம்பிக்கை அதிகரிக்கிறது. காயமுற்றுக் கிடப்பவன் கண்களைத் திறந்து பார்த்ததுடன் 'தாகத்திற்குத் தண்ணீர் தாருங்கள்' என்றும் கேட்கிறான். உறவினருள்ளம் மகிழ்ந்து போகிறது.

ஆனால் நடப்பதென்ன! போர்க்களத்திற்குப் பக்கத்தில் தடாகம் இருக்கிறதா! அல்லது தண்ணீர்ப் பந்தல் உண்டா! ஓடிப் போய்த் தண்ணீர் கொண்டு வருவதற்கு முன்பே பிரேதமாகி விடுகிறான் தண்ணீர் கேட்டவன்.

பிரேதம் போல மூர்ச்சித்துக் கிடந்தவன் நிஜமாகவே பிரேதமாகி விடுகிறான்! தாகம் தணியாமலே — அந்த மரண தாகத்துடனேயே — மாண்டு போகிறான்.

இதே நிலையில் இருந்த வேறொருவன் தண்ணீர் பருகித் தாகசாந்தி செய்து கொள்ளத் தொடங்குகிறான். ஆனால் பூர்ண தாக சாந்தி இல்லாமலே இறந்து போகிறான்.

இதே நிலையில் இன்னும் ஒருவன், வந்த தண்ணீரை வாயில் சிறிது சிறிதாகத் தன் காதலுக்கு உரியவர் ஊற்ற ஊற்றப் பருகி அந்தத் தாகம் தீர்ந்த பிறகு மரண மடைகிறானும். 'அந்தக் கடனையும் தண்டிக் கொண்டு போய் விட்டான்' என்று பரிதவிக்கிறார்கள் இவனுக்கு வேண்டியவர்கள்.

இப்படி மரண தாகத்தில் இருந்தவர்களை மூப்பிரிவினராக்கிக் காட்டும் ஒரு பயங்கரமான சித்திரம் இது:

இருகணும் திறந்து
  நோக்கி அயல்இருந்(து)
  இரங்கு கின்ற

உருகுதம் காத —
  லோரை 'உண்ணும்நீர்
  உதவும்' என்றார்;

வருவதன் முன்னம்
  மாண்டார் சிலர்;சிலர்
  வந்த தண்ணீர்

பருகுவார் இடையே
  பட்டார்; சிலர்சிலர்
  பருகிப் பட்டார்.

[அயல் இருந்து — தம் பக்கத்தில் இருந்து. பருகுவார் — பருகத் தொடங்கியவராய். இடையே பட்டார் — நடுவே இறந்து விட்டார்கள். சிலர் சிலர் — மிகச் சிலர்.]

அன்பையும் வென்ற தற்காப்பு

போரில் காயம்பட்ட மக்களைச் சுமந்து கொண்டு போகிறார்களாம் தந்தையர். 'அவர்கள் செத்துப் போனார்கள்' என்று உடலை எறிந்து விட்டு 'நாமாவது தப்பிப் பிழைப்போம்' என்று ஓடிப் போகிறார்களாம்.

ஆனால் இவர்களாவது பிழைத்துக் கொள்கிறார்களா! இந்தக் கொடுமையை இந்தப் பாடல் — கண்ணாடியில் கண்டு கொள்ளுங்கள்:

மக்களைச் சுமந்து
  செல்லும் தாதையர்,
  வழியின் 'ஆவி

'உக்கனர்' என்ன
விசித் தம்மைக்கொண்(டு)
ஓடிப் போனார்,

கக்கினர் குருதி
வாயால், கண்மணி
சிதறக், காலால்,

திக்கொடு நெறியும்
காணார், திரிந்துசென்(று)
உயிரும் தீர்ந்தார்.

[குருதி – இரத்தம். சிதற – தெறித்து விழ. நெறி – வழி.

தாங்கள் சுமந்து சென்ற பிள்ளைகள் ஆவியை இழந்தார்கள் என்று இந்தத் தந்தையர் நினைத்தது கூடப் பிரமை யாக இருக்கலாம். 'ஆவி உக்கனர் என்ன வீசித் தம்மைக் கொண்டு ஓடிப்போனார்' என்று கவி கூறுவதைக் கவனிக்க வேண்டும்.

'வீசி' என்ற சொல்லும், 'தம்மைக் கொண்டு ஓடிப் போனார்' என்ற சொற்றொடரும் ஊன்றி நோக்கத்தக்கன. இவர்கள் இருந்த நிலையில் தம்மைக் கொண்டு ஓடுவதே சிரமமாக இருக்கும்போது மக்களையும் சுமந்து கொண்டு ஓடுவது எவ்வளவு சிரமமாக இருக்கும்! அன்பையும் வென்று விடுகிறது தற்காப்பு – உணர்ச்சி – அதாவது தம்மை எப்படியாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற உயிராசை.

இங்கே நிறுத்தி விட்டாலும், இது போர்க்களத்தின் கொடுமைகளைக் காட்டும் ஓர் அருமையான சித்திரம் தான். ஆனால் கம்பனுடைய மனோபாவம் மேலும் படர்ந்து போகிறது;

இப்படித் தம்மைக் கொண்டு ஓடிப் போகிறவர்கள் வாயால் இரத்தம் கக்குகிறார்களாம். 'ஏன்! எப்படி?' என்பதைக் கவி நமது ஊகத்திற்கே விட்டு விடுகிறான்.

காரணம் துயரமிகுதி தானா! இவர்களும் அடிபட்டு ஊமைக்காயம் பட்டிருந்தார்களா! அல்லது அச்ச மிகுதியா! கண்மணி தெறித்துப் போயிற்று என்றும் கவி சொல்லுகிறானே.

கண் பார்வை இழந்ததும் திக்கும் தெரியவில்லை, வழியும் தெரியவில்லை. காலால் தடவி வழிகாண முயன்று வழி மாறிப் போய் உயிரும் தீர்ந்து விழுந்து விடுகிறார்களாம்.

இத்தகைய படுகளக் காட்சிகளை வருணிப்பதற்கு மனோபாவம் மட்டும் போதாது; எத்தனையோ போர்க்களங்களைக் கண்ட அனுபவமும் நம் கவிஞனுக்கு உண்டென்று கருதுவது தவறாகாது.

தூதர் வருகை

அதிகாயன் மரணத்திற்குப் பின் ராட்சஸ சேனை நிலைகெட்டுச் சிதறிப் போயிற்று. ஒரு சிறு பகுதியே உயிர் தப்பிக் கோட்டைக்குள் புகுந்து விடுகிறதாம்.

ஆனால் இவர்கள் வருவதற்கு முன்பே தூதர்கள் ராவணனிடம் ஓடி வந்து செய்தி சொல்லுகிறார்கள்.

மன்னவன் அடியில்
வீழ்ந்தார், மழையின்நீர்
வழங்கு கண்ணார்

[மழையின் நீர் – மழை போலக் கண்ணீரை. வழங்கு – வெளியே விடுகிற.]

இவர்கள் வாய்திறந்து ஒன்றும் சொல்லவில்லை. அழுத கண்ணே பேசும் போது, இதைக் காட்டிலும் அதிகமாக வாய் தான் என்ன சொல்ல முடியும்!

ராவணன் அறிவாளி இல்லையா! பத்து மூளைகள் சுறுசுறுப்பாக வேலை செய்யும் போது நடந்ததைத் தெரிந்து கொள்ள முடியாதா! எனினும் 'நடந்ததைச் சொல்லுங்கள்' என்று கேட்கிறான்.

தூதர்களும் சொல்லுகிறார்கள். 'நடந்த போரிலே' என்று தொடங்குகிறார்கள், பளிச்சென்று விஷயத்தைச் சொல்லி விடாமலே:

'ஆக்கிய போரின்
ஐய! அதிகாயன்
முதல்வ ராய

கோக்குலக் குமரர்
எல்லாம் கொடுத்தனர்
ஆவி' என்றார்

[கோக்குலக் குமரர் – அரசகுலத்துப் பிள்ளைகள்.]

* * *

ராவணனிடம் தூதர்கள் படுகளக் காட்சிகளை வருணிக்கவில்லை. ஆனால்,

கோக்குலக் குமரர்
எல்லாம் கொடுத்தனர்
ஆவி

என்ற இரத்தினச் சுருக்கமான செய்தி போதாதா!

'குமரர் எல்லாம்' என்பதை அழுத்திச் சொல்லுகிறார்கள். 'கொடுத்தனர் ஆவி' என்று தான் சொன்னார்கள். ஆனால் ராவணன் காதில் 'நீ பலி கொடுத்து விட்டாய் பிள்ளைகளையெல்லாம்!' என்றல்லவோ விழுகிறது வார்த்தை!

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

128. சோகம் சூழ்ந்த இலங்கை

அலைமேல் அலையாகக் காண்கிறது கடல். முதலாவது அலை கரையை எட்டிப் பிடிக்கவும் முயலாது, எழும்பி வந்த வேகத்திற்கும் மேலான வேகத்துடன் உள்வாங்கிப் போய் விடுகிறது.

கடல் விம்முகிறது; 'இந்தக் கடலுக்குத்தான் என்ன ஏக்கம்!' என்று எண்ண மிடுகிறோம்.

ஒரு பேரலை பொங்கி வருகிறது, 'இது என்ன வீக்கம்!' என்று சொல்லும் படி. கரை வரையில் வந்து திரும்பி விடுகிறது. வீரன் ஒருவனது புண்பட்ட மானம் போல் பொருமுகிறது கடல்!

மறுபடியும் ஒரு சிற்றலை தோன்றியதும் உள்ளுக்குள்ளே சுருண்டு போகிறது. 'இந்தக் கடல்தான் எவ்வளவு அனுதாப உணர்ச்சியை இப்போது வெளியிடுகிறது!' என்று நினைக்கிறோம்.

நீரைச் சுருட்டி வரும் ஒரு நீண்ட அலை கரை திகைக்க வந்து மோதுகிறது. 'இந்த வீரம் அதிசயமானது!' என்று வியக்கிறோம்.

பொங்கி வரும் கடலிலே ஓங்கி வீசும் அலை ஒன்று கரையை மோதி அப்பாலும் போய்த் திரும்புகிறது. 'கடலின் கோபாவேசம்' என்று ஒதுங்கிப் போகிறோம்.

இப்படி மேலும் மேலும் வந்துகொண்டிருக்கும் அலைகளில் கடைசியாக ஒன்று துள்ளித் துள்ளி வருகிறது; கரையைத் தள்ளிப் பார்த்து விட்டு மீண்டு விடுகிறது.

அசையாதது போலத்தான் காண்கிறது; ஆனால், உள்ளுக்குள்ளே கரை கரைந்து கொண்டுதான் இருக்கிறது. எனினும் காம்பீர்யத்திற்குக் குறைவில்லை.

எந்தக் கடற்கரையில் இத்தகைய காட்சி காண்கிறோம்? சாதுக்களுக்கும் தன் பகைவர்களுக்கும் ஒரு பிரளயமாகிய ராவணப் பெருங் கடலிலேதான் இப்போது இப்படி அலைகள் புரண்டு பெருமூச்சு விடும் காட்சியைக் காண்கிறோம்.

* * *

தூதர்கள் வந்து, 'அதிகாயன் முதலான அரசர்குலக் குமரர்கள் எல்லாம் ஆவி கொடுத்தனர்' என்று செய்தி சொன்னதும் ராவணன் விம்முகிறான்; விம்மி விம்மி ஏங்குகிறான். ஏக்கமும், விம்மலும் கூட, உள்வாங்கும் ஒரு பெருங் கடலைத்தான் நினைவூட்டுகின்றன.

ஒரு கணம் விம்மல், ஏக்கம்; அடுத்த கணம் பொங்குகிறது மானம். 'மடிந்தவர்களைச் சேர்ந்தவர்களுக் கெல்லாம்



எவ்வளவு வருத்தம் ஏற்படும்!' என்ற நினைப்பிலே இரக்கமும் வந்து விடுகிறது.

உற்றார் உறவினர் மீது இரக்கம் ஏற்பட்டதும், எதிரிகள் மீது கோபம் பிரளயமாய்ப் பொங்குகிறது. அதற்கு முன்னும் பின்னும் வீரமும் துன்பமும் வந்து விடுகின்றன. துன்பக் கடலிலே கண்ணீர் அருவி கொட்டுகிறது.

ராவணனது இந்த நிலைமை குறித்த ஓர் அருமையான கவிச் சித்திரம் இது:

ஏங்கிய விம்மல்,
மானம், இரங்கிய
இரக்கம், வீரம்,
ஓங்கிய வெகுளி,
துன்பம் என்(று) இவை
ஒன்றற் கொன்று
தாங்கிய தரங்க
மாகக் கரையினைத்
தள்ளித் தள்ளி
வாங்கிய கடல்போல்
நின்றான், அருவி நீர்
வழங்கு கண்ணான்.

[வெகுளி-கோபம். தரங்கம் - அலை.]

ஒரு திசையை நோக்கிக் கொண்டிருந்தவன், அப்படியே வேறொன்றும் செய்யாமல் அந்தத் திசையையே பார்த்துக் கொண்டிருக்கிறான்.

அடிமைப் பணி செய்ய வந்து நிற்கிறார்கள் தேவர்கள். ராவணன் இப்போது ஒரு கட்டளையும் இடாமல் அவர்களைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறான்.

சோகத்திலே இன்னும் சில அலைகள்

இப்போது தேவர்களையும் பார்க்கவில்லை; ஒரு திசையையும் பார்க்கவில்லை. கண்கள் ஒன்றையுமே பார்க்கவில்லையாம். காரணம் என்ன? வேறு எதைத்தான் பார்க்கிறான்? 'வந்த வசையினை நோக்கும்!' என்பது கவி.

'திசைகளெல்லாம் காணத் தேவர்கள் காண இப்படியும் வசை நேரிட்டதே! இதற்கு என்ன பரிகாரம் இருக்கிறது?' என்று உள்ளம் நினைக்கவே, கண்கள் வீர வாளாயுதத்தை நோக்குகின்றன.

வாளை நோக்கித்தான் என்ன பயன்? முதற் போரில் 'சங்கரன் கொடுத்த வாளும் வீரமும் களத்தே' போட்டு வந்தவன்தானே!

ஒன்றும் செய்ய மாட்டாத இந்த நிலையில் கைகள் இப்போது வாளைப் பற்றவில்லை; ஒன்றையொன்று பற்றிக் கொண்டு பிசைகின்றனவாம்.

பெருமூச்செறிகிறான், 'மீசை தீந்து போகுமோ!' என்று சொல்லத் தக்க நிலையில். சிரிப்பு வருகிறது; அழுகை வருகிறது; கோபம் வருகிறது; இந்த உணர்ச்சிகளையெல்லாம் மிஞ்சி விடுகிறது நாணம்.



பகுத்தறிவு மழுங்கிப் பைத்திய வெறி மேலிட்டது போல், ஒன்றும் செய்ய மாட்டாத நிலையில் எதையும் செய்து விடலாம் என்ற எண்ணமும் எழுகிறது :

மண்ணினை எடுக்க
எண்ணும்; வானினை
இடிக்க என்னும்;
எண்ணிய உயிர்கள்
எல்லாம் ஒருகணத்(து)
எற்ற என்னும்;
'பெண்ணெனும் பெயர
எல்லாம் பிளப்பன் !' என்(று)
என்னும்; எண்ணிப்
புண்ணிடை எரிபுக்(கு)
என்ன, மானத்தால்
புழுங்கி நையும்.

[என்னும் — எண்ணுவான். பெயர எல்லாம் — பெயரைக் கொண்டிருப் பவைகளையெல்லாம், எரி புக்கு என்ன — நெருப்புப் புகுந்தாற் போல்.]

ராவணனுடைய இந்தப் பெருஞ் சோகமும் அங்கேயிருந்தவர்களையெல் லாம் பயமுறுத்தி விடுகிறது. ஒருவரும் ஆறுதல் சொல்லத் துணியவில்லை.

சோகத்திற்குப் பரிகாரம் சொல்லவும் துணிய வில்லை. வீர உரை பகரவும் முன் வருவார் இல்லை.

மூச்சு விடவே பயந்தவர்களைப் போலக் காணப்படும் இவர்களா வாய் திறந்து பேசப் போகிறார்கள்? அச்சத் தால் மனம் ஒய்ந்து எல்லாரும் அழுது கொண்டேயிருக்கிறார்கள்.

தாயின் குரல்

'அழுகையிலும் உரக்க அழத் துணிந்தவர்கள் இல்லை !' என்ற நிலையில் இவர்களெல்லாம் இருக்கும்போது, ஒரு குரல் அந்த ஏக்கத்தையும் அழுகையை யும் பிறிக் கொண்டு வந்து ராவணன் காதில் விழுகிறது. அலறிக் கொண்டே வருகிறது குரல்.

ஏக்கம் தோய்ந்த குரல்தான்; ஆனால் 'இந்த ஆரவாரம் ஓயாதோ !' என்று கூடத் தோன்றுகிறது.

மார்பில் அடித்துக் கொண்டு வரு கிறாள், கை வளைகளும், கழுத்தில் அணிந்த அணிகளும் ஒலி செய்ய, இவள் தான் தானியமாலை என்ற ராவண பத்தினி.

பார்த்தால்தானே, கேட்டால்தானே?

செவ்வானம் சரிந்தாற்போல் செம் பட்ட மயிர்க் குழல்கள் அவிழ்ந்து பரவ வருகிறாள். உலைக் களத்தில் உருக்கிய செம்பைப் போல் கண்களில் இரத்தக் கண்ணீர் ததும்ப வருகிறாள். ராவணன் பார்த்தால்தானே?

தானியமாலை ராவணன் காலில் விழுந்து துக்கம் பொங்கப் புலம்புகிறாள். பாம்பு போலப் புரளுகிறாள். பத்துக் கண்களும் பார்த்தால்தானே?

'கொடியவனே !' என்று கூப்பிடு கிறாள். 'எனக்குக் கேடு சூழ்ந்தாய் !' என்று சொல்லித் துடிக்கிறாள். காதில் விழுந்தால்தானே?

துயர வெள்ளத்திலே ஆழ்ந்து புலம்பு கிறாள். 'இப்போது வல்லோரின் வலிமை தீர்க்கும் ஆற்றல் போய் விட் டதோ உனக்கு?' என்று கதறுகிறாள். 'வீரம் மெலிந்ததா, தோள் மெலிந் ததா?' என்று விசாரிக்கிறாள்.

'காது கேட்கவில்லையா? கேட்டும் தான் உணர்ந்து கொள்ளவில்லையா !' என்றே கேட்டு விடுகிறாள்.

இந்தப் புத்திர சோக வெறியை இந்த இரண்டு அடிகளும் எப்படிக் காட்டுகின் றன பாருங்கள் :

கேட்டாய், உணர்ந்திலையோ?
என்உரையும் கேளாயோ?

காட்டாயோ, என்னுடைய
கண்மணியைக் காட்டாயோ?

இந்தத் தாய்க்குத் தன் கண்மணியை ராவணன் எங்கேயோ ஒளித்து வைத் திருப்பது போலத் தோன்றுகிறது இப் போது. 'எந்தக் கண்ணைக் கொண்டு நான் இந்த உலகத்தைப் பார்த்து அனு பவித்துக் கொண்டிருந்தேனோ, அந்தக் கண்ணைக் காணவில்லையே !' என்கிறாள்.

'இந்திரனையும் ஜயித்தான் இவள் மகன்' என்ற பெருமை மண்டோதரிக்கு உண்டு. அந்தப் பெருமை இந்தத் தானியமாலைக்கு இல்லா விட்டாலும் 'இந்திரனுக்கும் தோற்காத காளை யைப் பெற்றாள்' என்ற புகழ் இருக் கிறதாம்.

'அப்பேர்ப்பட்ட மகனை வலிமையற்ற ஒரு மனிதனுடைய அம்புக்கு இரையாக உன்னைக் கொடுத்தேனே !' என்று

புலம்புகிறாள், இப்போது ராவணனை மறந்து விட்டது போல.

ஆனால் இந்த நிலை ஒரு கணம்தான். அதிகாயன் மட்டுமா மாண்டான்? அட்சகுமாரன் தொடக்கமாக எத்தனை இளைஞர்களைப் பலி கொடுத்து விட்டான் ராவணன்! இப்போது உயிருடன் இருக்கும் ராவண புத்திரன், மண்டோதரி மகன் ஒருவன்தானே!

எவ்வளவு வயிற்றெரிச்சலுடன் பேசுகிறாள்:

அக்கன் உலந்தான்;
அதிகாயன் தான்பட்டான்;
மிக்கதிறத்(து) உள்ளார்கள்
எல்லாரும் வீடினர்;
மக்களினில் நின்றுளான்
மண்டோ தரிமகனே!
திக்கு விசயம்
இனி ஒருகால் செய்யாயோ?

[அக்கன் — அட்சகுமாரன். உலந்தான் — அழிந்து விட்டான். பட்டான் — இறந்தொழிந்தான். வீடினர் — செத்தார்கள். மக்களினில் — ராவணனுடைய மக்களுக்குள். நின்றுளான் — உயிருடன் இருப்பவன்.]

தன்னுடைய மகனை அதிகாயன் முதலானவர்களைத் துணையாகக் கொண்டுதான் அந்த நாளில் இந்திரஜித்தும் திக்கு விஜயம் செய்து வந்தானும். தாயின் குரலுடன் சக்களத்தி குரலையும் கேட்கிறோம், இந்தத் தானியமாலையின் புலம்பலிலே.

இவள் கேட்பதற்குப் பதில் இல்லை. மேலும் எரிகிறது பெற்ற வயிறு

ஏதையா! சிந்தித்
திருக்கின்றாய்? எண்ணிறந்த
கோதையார் வேலரக்கர்
பட்டாரைக் கூவாயோ?

[கோதையார் வேல் அரக்கர் — எத்தனையோ பெண்களுடைய பிள்ளைகளும் கணவர்களும் வேறு உறவினர்களும் வேலாயுதபாணிகளுமான அரக்கர்கள்.]

'விபீஷணன் புத்திசாலி' என்று கூட இவள் ஒப்புக்கொள்கிறாள் இப்போது.

உம்பி உணர்வுடையான்
சொன்ன உரைகேளாய்!

என்கிறாள்.

கும்ப கருணனையும்
கொல்வித்(து),என் கோமகனை
அம்புக்(கு) இரையாக்கி
ஆண்டாய் அர(சு)ஐய!

என்று இடித்துக் காட்டுகிறாள். இந்த ஐயா பார்த்தால்தானே, கேட்டால் தானே?

* * *

இப்படியெல்லாம் புலம்பிச் சோர்ந்து போகும் தானியமாலையை ஊர்வசியும் மேனகையும் அணுகி வந்து அணைத்துக் கொண்டு இவளுடைய அந்தப்புர அரண்மனைக்குள்ளே கொண்டு போய்ச் சேர்க்கிறார்கள்.

அடிமைகளான தெய்வப் பெண்கள் ராணிக்குப் பணிவிடையாகச் செய்த காரியம் மட்டுமா இது? இந்தத் தாயின் பரிதாப நிலை கண்டு வான மகளிரும் இரங்கி அழுது கொண்டே பணி செய்கிறார்களாம்.

இரக்கத்திலும் அனுதாபத்திலும் எத்தனை வேற்றுமை உணர்ச்சிகள் மறைந்து போகின்றன!

129. மேதா விலாஸம் எங்கே?

'அரசே, உம்முடைய சகோதரனான கும்பகர்ணன் முதலில் வானர சேனையை முறியடித்துப் பிறகு ராம பாணங்களால் வெட்டுண்டு மடிந்தான்' என்று அரக்கர்கள் ராவணனுக்குச் செய்தி சொன்னதாக வால்மீகம் தெரிவிக்கிறது; இதிலிருந்துதான்,

> திறம்திறம் ஆகநின்ற
> கவிப்பெருங் கடலைச் சிந்தி
> இறந்தனன் உம்பி

என்று தூதுவர் ராவணனிடம் செய்தி சொன்ன கம்ப சித்திரம் உருவாகியிருக்க வேண்டும்;

எனினும், கும்பகர்ணன் கொல்லப்பட்டதுமே ஓடி வந்த அரக்கர்கள் ராவணனிடம் செய்தி சொன்னதாக வால்மீகி கூறுவதற்கும், 'மருத்த ஜனக நாடகம்' பார்த்துக் கொண்டிருக்கும் ராவணனிடம் திடீரென்று தூதர்கள் தோன்றிப் பையக் காதோடு காதாய்ச் செய்தி சொல்வதற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதென்பதைக் கலை நோக்குடன் பார்க்க வேண்டும்; வால்மீகி கதையின் முக்கிய நிகழ்ச்சிகளைப் பின்பற்றியும், பொருள் பொதிந்த சில விவரங்களைப் பயன்படுத்திக் கொண்டும் கம்பன் எப்படி ஒரு புதிய சிருஷ்டி செய்து விடுகிறான் என்பதை ரஸிகர்கள் நுணுகி நோக்கி ஆராய்தல் வேண்டும்; கும்பகர்ணனது மரணத்தைக் கேள்வியுற்றதும் ராவணன் மூர்ச்சித்துக் கீழே விழுந்ததாகவும் வால்மீகி சொல்லுகிறார். இதிலிருந்து ஒரு கலாயோக நிஷ்டை புரிந்து கம்பன் கண்டு காட்டும் நிகழ்ச்சிச் சித்திரம் இது:

> தாரோடு புனைந்த
> மௌலி தரையொடும்
> பொருந்தத் தள்ளிப்
> பாரோடும் பொருந்தி
> நின்ற மராமரம்
> பணைக ளோடும்
> வேரோடும் பறிந்து
> மண்மேல் வீழ்வதே
> போல வீழ்ந்தான்

[தாரொடு - மாலையோடு; மௌலி- கிரீடம். பணைகளோடும்-கிளைகளோடும்.]

அதிகாயன் முதலான ராவண குமாரர்கள் தங்கள் சிற்றப்பன் இறந்தது கேட்டு அழுதார்கள் என்று சொல்லிவிட்டு, ராவணன் புலம்பலை வருணிக்கிறார் வால்மீகி. இந்தப் புலம்பலும்



கம்பனது ராவண பிரலாப சித்திரத்திற்கு உதவி யிருக்கிறது.

வால்மீகியின் சில பொருள் பொதிந்த விவரங்களைக் கம்பன் தழுவிக் கொள்வதைக் கவனிப்பது போல் ரஸிகர்கள், சில விவரங்களைக் கம்பன் தன் குணசித்திரங்களுக்குப் பொருத்த மில்லையென்று விளக்குவதையும் கவனிப்பது நலமாகும். இதனால் இருவர் கலைப் போக்கிற்கும் உள்ள வித்தியாசம் நன்கு புலனுகக் கூடும்.

இதற்கு ஓர் உதாரணம் காண்போம். வால்மீகியின் ராவண பிரலாபத்திலே விபீஷணனைக் குறித்துப் பின்வரும் நினைவுகள் இடம் பெறுகின்றன.

'என்னைப் பார்த்து விபீஷணன் சொன்ன நற்போதனைகளைக் கேளாமற் போனேனே! ஐயோ! அந்த மகாத்மா சொன்ன சொற்களைப் புத்தியின்மையால் அப்போது உண்மையென்றுகொள்ளாது விட்டேனே! கும்பகர்ணனும் பிரகஸ்தனும் குரூரமாய் மரணமடைந்தது முதல், விபீஷணன் சொன்ன அந்த ஹிதோபதேசம் என் மனசை அறுக்கிறதே! தர்மவானான அந்த என் தம்பியை அவமதித்துத் துரத்தி விட்டேனே. அந்தக் கொடிய வினையின் பயனை இப்போது அனுபவிக்கிறேன்!'

இத்தகைய நினைவுகள் கம்பனது ராவண குணசித்திரத்திற்குச் சிறிதும் பொருந்துவன அல்ல. விபீஷணனை மகான் என்றுவது, தர்மவான் என்றுவது, அவனுடைய வார்த்தையை நற்போதனை என்றுவது கம்பனுடைய ராவணன் குறிப்பிடவே மாட்டான்.

விபீஷணன் ராவணனை 'இனி அவன் அண்ணன் இல்லை; துறந்தேன்' என்று உறுதி கொண்டது போலவே, ராவணனும் விபீஷணனை 'இனி அவன் தம்பி இல்லை; துறந்தேன்' என்றல்லவா உறுதி பூண்டிருக்கிறான். மேலும் கம்ப—ராவணனுக்குத் தர்மம் என்பதே கோழைத்தனம் தானே!

கும்பகர்ணனும் ராவணன் செய்தது பிசகென்று, அஞ்சாது அழுத்தமாய்க் கண்டித்தான். எனினும் அண்ணன் என்றும் அரசன் என்றும் ராவணனைக் கௌரவித்து "அவனால் அல்லவா சுகம்



களையும் பெருமைகளையும் அடைந்திருக்கிறோம் என்ற நினைப்புடன் அவனுக்காக அந்த யுத்த வேள்வியில் தன்னைப் பலியாகக் கொடுத்தான். இத்தகைய தம்பியைத் 'தர்மாத்மா' என்று ராவணன் சொன்னாலும் கம்பசித்திரத்திற்கு ஒருவாறு பொருந்துவதே.

விபீஷணனோ சத்துருவைச் சரணமடைந்து அண்ணனுடைய ரகசியங்களையும் வெளியிட்டவன். ராட்சஸ ஏகாதிபத்தியத்திற்குக் குழி தோண்டியதுடன், ராட்சஸ வம்சத்தையே வேரறுக்கவும் முயல்பவன்.

ராஜ்யத்திற்கு ஆசைப்பட்டு அண்ணனுக்கும் அரசனுக்கும் துரோகம் செய்த சுக்கிரீவனை ஒத்திருப்பவன் தானே விபீஷணன்? இப்படியெல்லாம் ராவணன் கருதக் கூடுமாதலால், வால்மீகியின் ராவண பிரலாபத்தில் இடம் பெற்றுள்ள மேலே சொன்ன நினைவுகள் கம்பனது ராவணபிரலாபத்தில் இடம் பெறவில்லை.

அதிகாயன் முதலானவர்களின் வதை மூன்று ஸர்க்கங்களில் வால்மீகியால் பிரஸ்தாபிக்கப்படுகிறது. இந்தக் கதைப் போக்கிற்கும் கம்பனுடைய கதைப் போக்கிற்கும் இடையே உள்ள வேற்றுமைகள் ஆராய்ச்சியாளர்களால் பரிசீலனை செய்யத்தக்க அளவிற்கு முக்கியமானவையல்ல. எனினும் இங்கே கம்பனது போர்க் கொடுமை வருணனை சிந்தனைக்கு உரியது எனலாம்.

அதிகாயன் வதமானது கேட்டும், மற்ற வீரர்கள் வதமானது கேட்டும் ராவணன் சோகமடைவதை ஒரு ஸர்க்கத்தில் குறிப்பிடுகிறார் வால்மீகி. ராவணன் வருத்தத்துடன் 'இனி மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்' என்று அரக்கர்களுக்குக் கட்டளையிட, அவர்களும் அப்படியே செய்தார்கள் என்று சொல்லி விட்டு, அரக்க வேந்தன் தன் மாளிகைக்குள் சென்று, அந்தப் புத்திர சோகத்தையே நினைத்துக் கொண்டு அடிக்கடி பெருமூச்சு செறிந்தான் என்பது வால்மீகி வாக்கு.

ராவணன் கண்களில் சோகநீர் ததும்பப் புதல்வர்களின் மரணத்தையும், கும்பகர்ணன் முதலானவர்களின் கொடுமையான சாவையும் நினைத்து நினைத்துக் கவலைக் கடலில் மூழ்கியிருக்கும்போது, இந்திரஜித்து வந்து, தான் வெல்வதாக உறுதி கூறி ராவணனைத் தேற்றுகிறான் என்பது வால்மீகி கதை. இந்தக் கதைப் போக்கில் தானியமாலையின் பிரலாபம் இடம் பெறவில்லை.

அதிகாயன் முதலியோர் இறந்தது கேட்ட ராவணன் 'கரையினைத் தள்ளித் தள்ளி வாங்கிய கடல்' போல் நிற்பதும், ஒரு திசையையே நோக்குவதும், பிறகு ஒரு திசையையும் நோக்காமல் தனக்கு வந்த வசையை நோக்குவதும், அடிமை வேலைகளை இடாமலே அடிமைத் தேவர்களைச் சும்மா பார்த்துக் கொண்டிருப்பதும் எல்லாம் புதிய கம்ப சிருஷ்டிதான்.

வாளை நோக்கிய பின் அதை எடுக்காமலே கைகளைப் பிசைந்து கொண்டிருப்பது தான் ராவணனது இதயப் பிரதேசத்திற்குள்ளே நம்மைக் கொண்டு போய் விடவில்லையா? மீசை தீந்து போகுமாறு பெருமூச்செறிவதையும் எவ்வளவு கவனமாய்க் கண்டு காட்டுகிறது கவிமேதை.

'இந்தச் சோகத்திலும் சிரிக்கிறான் பார்' என்று காட்டி விட்டு, அந்தச் சிரிப்பு விரைவில் அழுகையாவதையும், அந்த அழுகை கோபமாவதையும், அந்தக் கோபமும் வெட்க உணர்ச்சியில் மறைந்து போவதையும் கவிஞன் கண்டு காட்டும் போது, ராவண இருதயத்தை ஒரு புஸ்தகம் போல் வாசிக்கிறோமல்லவா?

சோகம் ஒன்றும் இயலாத நிலையில் கொண்டு போய்ச் சேர்த்து விடுகிறது ராவணேசுவரனை. எனினும் இந்தச் சோகப் பிராந்தன், ஜ்வர வேகத்திலும் வெறியிலும் எவ்வளவு தண்ணீரையும் குடித்து விடலாம், இன்னும் ஏதேதோ செய்து விடலாம் என்று ஒரு நோயாளி நினைப்பது போல், 'விண்ணை இடிப்பேன்; மண்ணை எடுப்பேன்!' என்றெல்லாம் 'கன்னா பின்னா' வென்று திட்டமில்லாத் திட்டங்கள் போடுகிறான்!

'இந்தச் சோகமும் பயமுறுத்துகிறது சோபத்தைப் போலே!' என்று மூச்சையும் தாராளமாக விட அஞ்சியவர்களைப் போல் விம்மிக் கொண்டிருந்தவர்களைக் காட்டும் மேதையைத் தான் என்னென்பது? இவர்களுக்கு முன்னே ராவணனும் காடு போலத் தோள்களை வளர்த்துக் கொண்டு அப்படியே சும்மா இருக்கிறானும்.

இந்த நிலையில்லாத நிலையில் விம்மல்களையும் ஏக்க ஒலிகளையும் கடைந்து

கொண்டு வருகின்றன தானியமாலை யின் அலறலும் ஏக்கமும்; அவளும் வந்து விடுகிறாள்;

இந்தத் தானியமாலையின் பிரலாபத் திற்கு ஒரு பிரவேசம் தான் ராவணன் நிலை. இவள் தோற்றத்தையும் செயல் களையும் வருணித்து 'இவள் புலம்பலுற் றாள்' என்று சொல்லி, அதோடு,

அழக்கண்டும் அறிந்தி —
லாதாள்

என்று ராவணனுடைய தன்மையையும் தொடுத்துக் காட்டும் கலைத் திறனைப் பாருங்கள்;

ஐந்து பாடல்களில் தானிய மாலை யின் புத்திரசோகம் ஓர் அதிசயமான கம்ப சித்திரமாகி விடுகிறது. இந்தப் பகுதி முழுவதும் கம்பனது சொந்தக் கலா சிருஷ்டிதான்.

அரக்கியர் தலைவிரி கோலமாய்த் திரண்டு அழுவது கண்டுதான் இந்திர ஜித்து சுறுசுறுப்பாகிறான்: நடந்தது இன்னதென்று தெரிந்து கொள்ளாமலே சந்தேகங்களை உள்ளத்தில் எழுப்பிக் கொள்கிறான்.

அழுது கொண்டிருந்தவர்கள் செய்தி ஒன்றும் தெரிவிக்கவில்லை: இவன் கேட் டாலும் அந்தக் கேள்வியைப் புரிந்து கொள்ளும் நிலையிலும் அவர்கள் இல்லை: அழுகுரல் தவிர வேறு குரல் காட்டி விஷயத்தைச் சொல்லுகிறவர்கள் இல்லை;

ராவணனை நேரில் பார்த்துத் தான், நடந்ததைத் தெரிந்து கொள்ள முடி கிறது: ராவணனைக் கண்ணுறக் கண்ட தும் நெஞ்சில் கொஞ்சம் ஆறுதல் ஏற்படு கிறதாம். ராவணனுக்கே ஏதோ ஆபத்து ஏற்பட்டு விட்டது போன்ற ஒரு சந்தேகம் உள்ளத்தை அலைத்துக் கொண்டிருந்தது;

அப்பால் இந்திரஜித்தே போர்க்களத் திற்கே வந்து விடுகிறான்: யுத்தத்தின் அதி முக்கியமான பகுதிக்கு வரப்போகி றோம். 'காவியத்திற்குள் ஒரு குட்டிக் காவியம்' என்று சொல்லும்படி, 'யுத்த காண்டத்திற்குள்ளே ஒரு குட்டி யுத்த காண்டம்' என்று சொல்லும்படி அமைந் திருக்கிறது இந்திரஜித்தின் வீர கதை யெல்லாம்;

இந்திரஜித்தைக் குறிக்கும் இந்த ஆரம்பப் படலத்திற்கு 'நாகபாசப் பட லம்' என்று பெயர்: இந்திரஜித்து நாக பாசம் வீசி எதிரிகளை அல்லற்படுத்து வது இந்தப் படலத்தின் முக்கிய நிகழ்ச்சி. பிறகு பிரமாஸ்திரமும் வீசப் போகிறான்.

வால்மீகத்திலோ இந்திரஜித்தின் வீர கதை இப்படி ஒரு கோவையாக அமைய வில்லை. யுத்தத்தின் ஆரம்பத்திலேயே இந்திரஜித்து போரில் கலந்து கொண்டு நாகபாசத்தையும் பிரயோகித்து, ராம லட்சுமணர்களைக் கட்டி விடுகிறான்: இந்திரஜித்தின் போராட்டப் பகுதி யொன்று யுத்த காண்ட முகப்பிலே வந்து விடுகிறது;

இந்திரஜித்தின் நாகபாசப் போராட் டத்திற்குப் பின்புதான் ராவணன் தானே போருக்கு எழுவதும், ராமனால் மகுடபங்கம் செய்யப்படுவதும் நடை பெறுகின்றன; இதற்கும் பின்புதான் கும்பகர்ணன் துயிலெழுப்பப் பெற்று யுத்தத்திற்குப் போகிறான்.

இத்தகைய வேற்றுமைகளில் அல்ல நாம் கம்பன் மேதையைக் காண்பது; இவனது கலா சிருஷ்டிகளான கட்டங் களில் தான் இந்த மேதா விலாஸத்தின் சிறப்பியல்புகளைக் காண்கிறோம்;
